“உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது”

## சுவாமி விபுலானந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின்

25ஆவது ஆண்டு

# வெள்ளிவிழா

நிறைவு மலர் - ஆகஸ்ட் 2017

---

குருக்கள் வீதி, அக்கரைப்பற்று – 07.
அம்பாறை, இலங்கை

---



| | | |
|---|---|---|
| பதிவிலக்கம் | - | SS/NEP/AM/AV/AP/21/03-05/01/1994 |
| தொலைபேசி இலக்கம் | - | 0672278899, 0672277514 |
| மக்கள் வங்கி கணக்கிலக்கம் | - | 063100150000480 |
| HNB வங்கி | - | 078020016275 |
| கொமர்ஷியல் வங்கி | - | 8172006120 |
| E.mail முகவரி | - | kailayapillait9@gmail.com |

**சுவாமி விபுலாநந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின்**

**25ஆவது ஆண்டு**

# வெள்ளிவிழா

**நிறைவு மலர் – 2017**

நூல் :- வெள்ளிவிழா மலர்

மலர் வெளியீடு :- சுவாமி விபுலானந்தா சிறுவர்அபிவிருத்திநிலையம்
ஆலையடிவேம்பு.

பதிப்பு :- ஆவணி – 2017

மலர் வெளியீட்டு குழு :- இறைபணியில்
திரு. த. கயிலாயபிள்ளை JP,
- தலைவர் SVCDC
திரு.பெ.தணிகாசலம்
- அதிபர்,
திரு.வி.சுகிர்தகுமார்
- சமுர்த்தி உதவி முகாமையாளர்,
திரு.க.ரஜனிகாந்
- C.O.W
திரு.க.செல்வானந்தம்
- D.O

கணனி வடிவமைப்பு :- Effke.com – அரசயடி, அக்கரைப்பற்று.
தொ.இல : 0672052412

எழுத்துக்கோர்ப்பு உதவி :- திருமதி. கிருஸ்ணநாயகி வாசுதேவன்
செல்வி. மகேந்திரன் டிலோஜினி

அச்சுப் பதிப்பு :- நியு செலக்ஷன் – அக்கரைப்பற்று.
தொ.இல : 0672278855

## தூரநோக்கு

சிறந்த சிறுவர்களினூடாக உயரிய சிந்தனை கொண்ட உத்தமர்களை சமூகத்திற்கு வழங்குதல்

## பணிக்கூற்று

பாதுகாப்பு, சுத்தம், சுகாதாரம், ஒழுக்கம், பண்பாடு, கல்வி, கலை, கலாசாரம், தொழிநுட்பம், உளவிருத்தி, குடும்பச் சூழல், பொருளாதாரம், குடிநீர், போக்குவரத்து, உறைவிடம், தேசிய உரிமை என்பன சிறுவர்களிடையே பரிணமிப்பதற்குப் பாடுபடல்.

## விழுமிய வாக்கு

நலிவுற்ற சிறுவர்களுக்கான எதிர்கால சுபீட்சமான நல்வாழ்வைக் கட்டியெழுப்புவோம்.



# சுவாமி விபுலாநந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் கீதம்

*ஆனந்தமாம் விபுலாநந்த நிலையம்*
*அருள்நெறி மலர்ந்திட வாழ்த்திடுவோம்*
*அவலமும் வறுமையும் ஒழிந்திட வென்றே*
*அன்புடன் நற்பணி புரிந்திடுவோம் - ஆனந்தமாம்*

*குருமொழி கேட்டே அவர்வழி நடந்து*
*குருகுல மாணவர் ஒருகுலமாய்*
*ஒருவருக்கொருவர் உதவிகள் புரிந்தே*
*உயர்ந்திடும் வாழ்வினுக் குழைத்திடுவோம் - ஆனந்தமாம்*

*ஆணவமொழிந்திட ஞானம் வளர்ந்திட*
*ஆன்மீகச் செல்வம் பெருகிடவே*
*அருளுவாம் பரம்பொருள் தனை நினைந்தே*
*அமைதியில் மனநிறை வெய்திடுவோம் - ஆனந்தமாம்*

*தூயநற் கலைகளும் சுகந்தரு வாழ்வும்*
*துலங்கிடும் அறிவினை ஆய்ந்திடுவோம்*
*மானில மாந்தர்தம் உறவினை மதித்தே*
*நலம்பெறு நன்னெறி வளர்த்திடுவோம் - ஆனந்தமாம்*

*தேன் தமிழ் மொழியோடு தேசிய மொழியும்*
*ஆங்கிலமயல் மொழி பயின்றிடுவோம்*
*ஆன்றோர் சால்புகள் அமைதி துலங்கிட*
*மாண்புறு பண்பிலுயர்ந் திடுவோம் - ஆனந்தமாம்*

*பக்தியும் சக்தியும் புத்தியும் கொண்டே*
*பெற்றிடும் நற்பெரும் பேறுகளாம்*
*சத்தியம் தர்மம் சமரச நெறியில்*
*நித்தியம் நாடு நலம் பெறவே - ஆனந்தமாம்*

**ஆக்கியவர் :**
**சைவப்புலவர் திரு.சே.சாமித்தம்பி**
**ஓய்வுபெற்ற அதிபர்**

# சுவாமி விபுலாநந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் நிருவாகக் கட்டமைப்பு

- அக்கரைப்பற்று இந்து இளைஞர்மன்றம்
  - நம்பிக்கையாளர் சபை
    - செயலாளர் – தலைவர் – பொருளாளர்
      - நிறைவேற்று முகாமையாளர்
        - கணக்குப்பகுதி
          - காசாளர்
            - கணக்குப்பதிவாளர்
              - களஞ்சியப் பொறுப்பாளர்
        - சிறுவர் பராமரிப்புப் பகுதி
          - மேற்பார்வையாளர்
            - ஊழியர்கள்
              - மாணவர் தலைவர்
        - கல்விப்பகுதி
          - இணைப்பாளர்
            - ஆசிரியர்கள்
              - மாணவர்கள்
        - இயந்திரசாதனம்
          - இணைப்பாளர்
            - சாரதி
        - பண்ணை மற்றும் வயல்ப்பகுதி
          - இணைப்பாளர்
            - பண்ணையாளர்கள்
              - வயல் மேற்பார்வையாளர்கள்
      - உள்ளகக் கணக்காளர்

# இல்லத்தின் ஊற்று

ஒரு அடி என்ன நோக்கிவை
நூறு அடி உன்னை நோக்கி நான் வருவேன்
இந்த சத்திய வாக்கு இங்கு உண்மையாகிறது

சுயநலமில்லாத காரியம் ஒவ்வொன்றும்
இறைவனின் திருவுளத்திலிருந்து உதயமாகிறது
இதுவே இல்லத்தின் வெற்றியாகும்

சுவாமிமார்களின் ஆசீர்வாதம்
எப்போதும் இவ்வில்லதிற்குண்டு அதனால்
எந்த எதிர் நடவடிக்கையும்
நிலைத்து நிற்பதில்லை மாறாக வெற்றியே.

பெருமனதோடு உதவுகின்ற ஒவ்வொருவரும்
புண்ணிய சீலர்களே அவர்கள் தெய்வகாரியமாகவே
இதை ஒரு யக்ஞமாகச் செய்கின்றனர்

தொடங்கிய காலம் முதல் இந்நிலையம்
பின்னடைவு கண்டதில்லை காரணம் - மக்கள்
இதனை பாரம்பரிய தர்மமாக நினைத்து உதவி வருகின்றனர்.

இதனை நாம் செய்யவில்லை. அப்படிச் செய்தோம் எனச்
சொல்ல எமக்கு உரிமையும் இல்லை
உங்கள் அனைவரின் கூட்டு முயற்சி
என்பதே உன்மை.

இவ்சேவாச்சிரத்தின்
பேர் ஊற்றுக்கு காரண கர்த்தாக்கள்
அனைவரும் இறைவனுக்குப் பிரியமானவர்களே.....!

அன்பே சிவம்

# கருங்கொடித்தீவின் சிறப்பு

வெண்செண்டாமலர் சூழ்ந்த வாவி மேவும்
வண்டுகளின் ரீங்கார நயத்தினூடே
தேன் மலரில் வழிகின்ற அமுதமுண்டு
மணம் நுகர்ந்த எருமைகள் அதிகம் உண்ட
மயக்கத்தில் பால் சொரிய கயல் மீன் கவ்வி
வான் முட்ட எங்குமாய் பாயும் வேளை
மங்கையர்கள் கொங்கை நீராடை நீக்கும்
சங்கதியைக் காதலர்கள் காணா வண்ணம்
கைதாவி மீனமர்த்திக் கவிகள் பாடும்
கருங்கொடித்தீவெங்கள் கண்ணானவூரே.

கால் நடைகள் அலைஅலையாய்த் தாவி ஓடும்
காலையெங்கும் பால் நிரப்ப வண்டி ஓடும்
வளஞ்சேர்க்கும் பல ஆறு ஊர் வழைக்கும்
நெல் மலைகள் குவித்துப் பொன்மனையைச் சேர்க்கும்
பணப்புளக்கம் திருமணங்கள் அதிகரிக்கும்
வந்தாரை வாழவைக்கும் பண்பு ஓங்கும்
ஆறுகடல் களப்பு குள மீன்கள் அள்ளி
விதவிதமாய் விருந்தோம்பி மீதிமீனை
லொறி லொறியாய் நகரேத்தும் ஊராமெங்கள்
கருங்கொடித் தீ வென்னும் கண்ணானவூரே

குயிலினத்தின் குரல் ஓசை காதைக்கவ்வ
மயிலாடி மருங்கு தோறும் கண்பறிக்கும்
மைனாக்கள் கிளி பலவும் காக்கை கொக்கு
சேவலோடு புள்ளினமுஞ் சேர்ந்தேழு சுரத்தை நல்கும்
விடியலின் சுகம் பார்த்து அருணன் தோன்ற
ஆலையத்தின் மணியோசை அழைக்கும் நாளும்
பள்ளிகளில் வாங்கோசை கேட்கும் ஆங்கே
பௌத்த தேவாலயங்கள் மணிகளுமாய் சங்கமிக்கும்
நான்கு மதம் இரு மொழிகள் புலமை ஓங்கும்
கருங் கொட்டித் தீவெங்கள் கண்ணானவூரே.

**திரு. த. கயிலாயபிள்ளை** JP
**தலைவர் - இந்து இளைஞர் மன்றம்**

# முன்னுரை

*1992ஆம் ஆண்டு தைமாத தைப்பூச தினமான 27ஆம் திகதி அக்கரைப்பற்று இந்து இளைஞர் மன்றத்தின் சார்பாக மட்டக்களப்பு ஸ்ரீ இராம கிருஷ்ண மிஷனைச் சேர்ந்த ஸ்ரீமத் ஜீவனானந்தஜீ மகராஜ் இச் சிறுவர் இல்லத்தை உருவாக்கினார். இறை வழிபாடானது ஆலயத்திற்குள்ளேயே முடங்காமல் நலிவுற்ற இந்து சமுதாயத்தை வளர்த்தெடுக்க மக்கள் தொண்டே மகேசன் சேவையென முழங்கி இறைவழிபாடு மானுட சேவையாக மலர இந்நிலையம் எதிர்காலத்தில் சேவைபுரிய வேண்டும் என வாழ்த்தி ஆசி தந்த அந்த இனிய நாள் என்றும் மறப்பதற்கில்லை.*

*அவர் தொடங்கி வைத்த இந்நிலையம் மனித வாழ்க்கையின் பல தேவைகளை பூர்த்தி செய்து கொண்டு உலகளாவிய ரீதியில் பாராட்டைப் பெற்று ஓர் புதிய பரிமாணத்தை தோற்றுவித்து வெள்ளி விழாவை “இந்து என்றே ஒன்று படு” என்றும் “இந்து சமுதாயம் நிறுவன ரீதியாகச் செயற்பட்டால் மட்டுமே எழுச்சி பெற்று நல்ல மாற்றங்களைக் கொண்டுவர முடியும்” எனும் தொனிப் பொருளில் ஓர் எழுச்சி விழாவாகக் கொண்டாடுகின்றது. இன்று மட்டுமல்ல எதிர்காலத்திலும் சகலரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்பதே எமது அவா.*

**திரு. த. கயிலாயபிள்ளை JP**
**தலைவர்**
**இந்து இளைஞர் மன்றம்**
**அக்கரைப்பற்று.**

## சிறுவர் இல்லத்தின் சேவைகளும் காலங்களும்


**1992 – 2000 ஆண்டு வரையிலான சேவைகள் பற்றிய விபரம்**

- காலப் பின்னணி - கொடிய பயங்கரவாதம், சிறுவர்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் சிறுவர்களின் தொகை 66.
- உதவிய நிறுவனங்கள் & அன்பர்கள் :-

| | |
|---|---|
| கொழும்பு இராம கிருஸ்ண மிசனும் மட்டு இந்து இளைஞர் மன்றமும் | இல்லம் அமைப்பதற்கான ஆலோசனைகளும் உதவிகளும் |
| புனர்வாழ்வு அமைச்சர் மர்ஹூம் எம்.எச்.எச்.அஸ்ரப் | கட்டிட உதவிகள் |
| உள்ளூர் ஸ்தாபனங்கள் பொதுமக்கள் | உணவு |
| சிறுவர் நன்னடத்தைத் திணைக்களம் | உணவு தளபாடம் |
| பட்ஸ், ஸ்கொட் (இலண்டன்) | உணவு |
| தமிழ் ஓபன் றஸ்ற் TOT இலண்டன் | தச்சு தொழில் உபகரணம், உணவு |
| Lions Club International District 306bl Srilanka | பாடசாலை உபகரணங்கள் |
| இந்து கலாசார திணைக்களம் | நூலகம் மற்றும் சீருடைகள் சமய சார்பான உதவிகள் |

| | |
|---|---|
| பிரித்தானியா ஆலயங்களின் அறங்காவலர் குழு | உணவு |
| திருமதி. நிர்மலா விஜயகுமார் இலண்டன் | உணவுகளும் தளபாடங்களும், கணணிகளும் |
| MIOT (இலண்டன்) | உணவு |
| சுவாமி நித்தியாநந்தாஜீ மகராஜ் | உணவு மற்றும் சமய போதனை |
| சர்வ மங்களானந்தாஜீ ரிஷிகேஷி | உணவு |
| கனகதுர்க்கை அம்மன் ஆலயம் இலண்டன் | உணவு |
| ADVRO - இலண்டன் | தொலைபேசி மற்றும் உழவு இயந்திரம் |

# நிஜத்தின் நிழல்கள்



இல்லம் உருவாக்க ஆலோசனை - 1990



இல்லம் திறந்து வைத்தல்



காயத்திரி சித்தர் முருகேசு சுவாமிகள் வருகைதரல் - 1994

# நிஜத்தின் நிழல்கள்





புனர் வாழ்வு அமைச்சின் கட்டிடப் பணி



இல்ல முகப்புக் கட்டிடம்



இல்லத்திற்கு சுவாமி நித்தியானந்தா ஜீ வருகை – 1998

## 2000-2006 ஆண்டு வரையிலான சேவைகள் விபரம்
## காலச் சூழல் கொடிய யுத்தம் சிறுவர் தொகை 90

**உதவிய நிறுவனங்கள் & அன்பர்கள் :**

| | |
|---|---|
| விமல்ராஜ் குழுவினர் சுவிஸ் | போட்டோ பிரதி இயந்திரம் அன்பளிப்பு |
| scot - இலண்டன் | உணவு |
| BUDS இலண்டன் | கல்வி |
| ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம் இலண்டன் | உணவு |
| இந்து கலாசார திணைக்களம் | சமய கலாசார உதவி |
| சிறுவர் நன்னடத்தைத் திணைக்களம் | பரிமாண நன்கொடை |
| ADVRO இலண்டன் | நெல் குற்றும் இயந்திரம் |
| திருமதி. நிர்மலா விஜயகுமார் இலண்டன் | கணணிகள் அன்பளிப்பு |

| | |
|---|---|
| UNICEF நிறுவனம் | விளையாட்டு உபகரணங்கள் |
| இராம கிருஸ்ண மிசன் (மட்டு) | மலகூடம் |
| உதவுங்கரங்கள் இலண்டன் | காணி அன்பளிப்பு |
| ஒப்ரிமா பவுண்டெஷன் இலண்டன் | பண்ணை உதவி |
| அவுஸ்ரேலியா தூதுவர் ஆலயம் | பாலர் பாடசாலை கட்டடம் |
| SLCDF நிறுவனம் | துவிச்சக்கர வண்டி |
| Helping East Lanka இலண்டன் | உணவு |
| பார்வதி சங்கரப்பிள்ளை | காணி அன்பளிப்பு |
| கண்டி றொட்றிக் கழகம் | உபகரணங்கள் அன்பளிப்பு |
| திருவாளர்கள் ரூபன் முருகானந்தன், ருத்ரா இலண்டன் | காணிக்கான உதவி |
| மட்/YMCA | நத்தார் அன்பளிப்பு |
| உள்ளூர் அன்பர்கள் | உணவு |

# நிஜத்தின் நிழல்கள்






சிறுவர் இல்லத்திற்கென காணிகள் பெறல் - 2003.

புதிர்ப் பொங்கல் இல்ல சாகாம வயலில் - 2003.

இல்லப் பராமரிப்புக்கான சாகாம வயல் - 2003.






விமராஜ் குழுவினரின் அன்பளிப்பு – 2004.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களை உறவினர் வரும் வரை தற்காலிகமாக பாதுகாத்தமை. -2004.

கல்விப் பணி - 2006 -



வருடாந்த ஒன்று கூடலும் நத்தார் பரிசு வழங்கலும்



உழவு இயந்திரம் அன்பளிப்பு Advro இலண்டன்




இல்லப் பண்ணைக் கட்டிடம், உபகரண அன்பளிப்பு Optima Fundation

## 2007 -2014 ஆண்டு வரையிலான சேவைகள் விபரம்

காலப் பின்னணி –
யுத்தம் ஓய்வு, மக்கள் முகாம்களிலும், வீடு, வாசல் இழந்தும் எதுவும் அற்ற நிலை.
பிள்ளைகளின் தொகை 75

**உதவிய நிறுவனங்கள் & அன்பர்கள்**

| | |
|---|---|
| செல்வருபனும் நண்பர்களும் கொழும்பு | புதிய இந்து இளைஞர் மன்றக் கட்டிடம் |
| Sky Rose விளையாட்டுக் கழகம் (இலண்டன்) | வெளி, உள் மாணவர்களுக்கான பிரத்தியேக கல்வி உதவி |
| Optima Foundation இலண்டன் | உணவு, வாட்டர்பம் |
| Anna Hellar (இலண்டன் பாடசாலை) | சாகாமக் காணி உதவி |
| England trust of helping gast lanka –uk | உணவு அன்பளிப்பு |
| Tamil orphans trust –uk | உணவுக்கான வருடாந்த உதவி |
| Old boys Association – Sivananda Vidyalaya –uk | உணவு |
| Buds – uk | கல்வி உதவி |
| Sri kanapathi temple –uk | உணவு உதவி |

| | |
|---|---|
| Helping hands –uk | கல்வி உணவு உதவி |
| சிறுவர் நன்னடத்தை திணைக்களம் | பரிமாண நன்கொடை |
| இந்து கலாசாரத் திணைக்களம் | சமய கல்வி கலாசார நிகழ்ச்சி உதவி |
| அம்பாறை மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் | வாடகைப் பொருட்களுக்கான உதவி, ஊழியர் ஒருவருக்கான சம்பள உதவி |
| தொண்டு நாத சுவாமிகள் அமெரிக்கா | வருடாந்த உதவி |
| SCOT – uk | வருடாந்த அன்பளிப்பு |
| திருமதி. சுமதி அசோக்குமார் நோர்வே | பல்கலைக்கழக மாணவர்களுக்கான அன்பளிப்பு |
| திருமதி.நிர்மலா விஜயகுமார் Uk | உணவு அன்பளிப்பு |
| Sri kanakathurkkai Amma temple – Uk | உணவுக்கான மாதாந்த அன்பளிப்பு |
| பிரதேச செயலகம் | மாதாந்த சமுர்த்தி நிவாரண கொடுப்பனவு |
| மட்/YMCA | நத்தார் அன்பளிப்பு |

# நிஜத்தின் நிழல்கள்



சுற்றுலா – 2012



இயக்குனர் சபை கூட்டம்- 2013



இல்லத்தில் கற்று உயர்நிலையில் உள்ள மாணவர்களில் சிலர்



மாணவர்களில் சிலர் கணணிப் பயிற்சியில் ஈடுபடுகையில்



பொங்கல் விழாவில் மாணவர்கள்



பிரார்த்தனையில் மாணவர்கள்



நாடக மேடையில் மாணவர்கள்



பூங்காவில் விளையாடும் மாணவர்கள்





இல்லங்களுக்கிடையிலான கிரிக்கட் போட்டியில் பங்கேற்றுப் பரிசில் பெற்றமை



கடற்கரையில் விளையாட்டில் மாணவர்களோடு



பரிசு பெறலில் இல்ல மாணவர்கள்



திருவெம்பாவையில் மாணவர்கள் தீர்த்தமாடல்.



விவேகானந்த விழாவில் இல்ல மாணவர்கள் - 2014.



விவேகானந்த விழாவில் யோகாசனப் பயிற்சியில் இல்ல மாணவர்கள் - 2014

# 2014- 2017 ஆண்டு இற்றை வரையிலான சேவைகள் விபரம்

காலப் பின்னிணி –
யுத்தம் ஓய்வு, யுத்த கலாசாரத்தால் பாதிக்கப்பட்ட கலாசார சீர்கேடானசூழல்.
பராமரிக்கப்பட்ட பிள்ளைகளின் தொகை :- 75
தற்போது பராமரிக்கப்படும் சிறார்களின் எண்ணிக்கை :- 27

## உதவிய நிறுவனங்கள் & அன்பர்கள்

| | |
|---|---|
| செல்வருபனும் நண்பர்களும் - கொழும்பு | சில நாள் உணவு |
| **Optima Foundation – இலண்டன்** | சில நாள் உணவு |
| **England trust of helping gast lanka –uk** | மாதாந்த சிலநாள் உணவு அன்பளிப்பு |
| **ADVRO – uk** | சிலநாள் உணவு அன்பளிப்பு |
| **BUDS – uk** | பண்ணைக்கான சிறு உதவி |
| **Helping hands –uk** | உபகரண உதவி |
| இந்து கலாசாரத் திணைக்களம் | சமய கல்வி கலாசார நிகழ்ச்சி உதவி |
| சிறுவர் நன்னடத்தை திணைக்களம் | பரிமாண நன்கொடை |
| அம்பாரை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் | ஊழியர்களுக்கான பயிற்சி |

| | |
|---|---|
| திருவாளர் ஜெயஜெயசுந்தர இலண்டன் | சிலநாள் உணவு அன்பளிப்பு |
| தொண்டு நாத சுவாமிகள் அமெரிக்கா- | வருடாந்த அன்பளிப்பு |
| Scot – uk | வருடாந்த அன்பளிப்பு |
| திருமதி. சுமதி அசோக்குமார் நோர்வே | வருடாந்த உதவி |
| Sri kanakathurkkai Amma Temple – Uk | சில மாணவர்களுக்கான மாதாந்த உணவு அன்பளிப்பு |
| திருமதி. நிர்மலா விஜயகுமாரும் நண்பர்களும் - Uk | சில நாள் உணவு உதவியும் பண்ணை மற்றும் கல்வி அபிவிருத்தி உதவிகள் |
| மட்/YMCA | நத்தார் பரிசு |



சிரமதானப் பணியில் இல்ல மாணவர்கள் - 2015



ஆற்றல் களம் - 2015



வருடாந்த ஒன்று கூடல் - 2015



விடுமுறை கால பயணம் - 2016



சுற்றுலா - 2016

# இந்து இளைஞர் மன்றத்தின் சேவைகளும் காலங்களும்

## 1987-2017 வரையிலான காலப்பகுதி

**உதவிய நிறுவனங்கள்**

| | |
|---|---|
| மட் /இந்து இளைஞர் மன்றம் | இடர் கால நிவாரணப் பணிகள், வீட்டுத் திட்டம் |
| அம்பாரை மாவட்ட இந்து இளைஞர் பேரவை | உபகரண உதவிகள் |
| இலங்கை இந்து இளைஞர் பேரவை | உபகரண உதவிகள் |
| சீடா நிறுவனம் | உபகரண உதவிகள் |
| மட்டக்களப்பு ஸ்ரீ இராம கிருஷ்ண மிஷன் | கட்டிடம் மற்றும் சில மலகூடங்கள் |
| நோராட் | சில மலகூடங்கள் |
| கொழும்பு ஸ்ரீ இராம கிருஸ்ண மிஷன் | இடர் கால நிவாரண உதவிகள், அறநெறிப் பாடசாலைக்கான உதவிகள் |
| இந்து கலாசாரத் திணைக்களம் | அறநெறிப் பாடசாலைகளுக்கான நூலகங்களுக்கான உதவிகள் |
| SOVA | இடர் கால நிவாரண உதவிகள் |
| Advro - இலண்டன் | சுனாமி நிவாரண உதவிகள், வெள்ள நிவாரண உதவிகள் |


| | |
|---|---|
| அமெரிக்க ஹாவாய் சிவாய சுப்பிரமணிய சுவாமிகள் | நிவாரண உதவிகள் |
| சுவாமி நித்தியானந்தாஜீ ரிஷிகேஷி | சமூக ஆர்வலர்களின் அறிமுகமும் உணவு உதவியும் மற்றும் சமய சொற்பொழிவுகள் |
| சுவாமி தந்திர தேவா | ஆலய நிர்மான உதவிகள் மற்றும் பயிற்சி நெறி உபகரணங்கள், நிவாரண உதவிகள் |
| சர்வ மங்களானந்தா ஜீ ரிஷிகேஷி - | இல்லத்திற்கான ஆரம்ப கட்ட உதவிகள் |
| திரு. S.செல்வரூபனும் நண்பர்களும் - கொழும்பு | மன்றத்திற்கான இருமாடிக் கட்டடம் மற்றும் நிவாரண உதவிகள், இல்லத்திற்கான உதவிகள் |
| உலக சைவப் பேரவை | வறியோர் நல உதவிகள் |
| இந்து ஸ்வயம் சேவக சங்கம் | யோகாசனப் பயிற்சிகள், வதிவிட பண்பாட்டு விழுமியப் பயிற்சிகள் விவேகானந்த விழாவிற்கான ஊக்குவிப்புக்கள், வறிய மாணவர்களுக்கான உயர் கல்வி உதவிகள் |
| Sky Rose –Uk | வறிய மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புக்கள், வெள்ள நிவாரண உதவி |
| Tamil orphan trust | வெள்ள நிவாரண உதவிகள் மற்றும் பயிற்சி நெறி உபகரணங்கள் |

| | |
|---|---|
| சின்மியா மிஷன் | கீதாசார உபதேசங்கள் மற்றும் உபநிடத உபதேசங்கள், பயிற்சிப் பட்டறைகள |
| பொதுமக்கள் | விழாக்களுக்கான நன்கொடைகள், உணவு அன்பளிப்புக்கள் |
| பெரியார்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் | விபுலானந்த சிலை அன்பளிப்புக்கள், மற்றும் இடர்கால உதவிகள், பயிற்சி மற்றும் வள உதவிகள் |
| ஆலயங்கள் | உதவி ஒத்தாசைகள் மற்றும் அன்பளிப்புக்கள் |
| அரச உதவிகள் | இல்லத்திற்கான கட்டட உதவி, சமுர்த்தி நிவாரண உதவி மற்றும் தளபாட உதவி |
| நிறுவனங்கள் | தேவைகளைக் கருதிய உதவிகள் |
| திரு. மு. நிதி | போட்டோ பிரதி இயந்திர அன்பளிப்பு |

# நிஜத்தின் நிழல்கள்




புயல்வீசிய போது
நிவாரணப் பணி – 1987





வீடுகள் கையளிப்பு – 1988



இரண்டு பேருக்கு மேல் இறந்தவர் களுக்கான வீடு அன்பளிப்பு - 1991



சிறுவர் இல்லத்திற்கான மதில் அமைத்து வழங்கல் இந்து இளைஞர் மன்றம் அக்கரைப்பற்று – 1994





திருவாசக முற்றோதல்
-1997



வெள்ள அனர்த்தின்போது பாடசாலை மாணவர்களுக்கு உபகரணம் வழங்கல்.



சமாதானப் பணிகளுக்கான சேவையைப் பாராட்டி மாவட்ட நீதிபதி தலைவரைக் கௌரவித்தல்.



சமாதானத்திற்கான
சகவாழ்வு மன்றம்
அம்பாரை மாவட்டம்





சிறுவர் இல்லங்களுக்கு துணிகள் வழங்கல்
சாரதா இல்லத்திற்கு உடுதுணி அன்பளிப்பு.



வலது குறைந்த பிள்ளைகளுக்கு உதவி வழங்கல் - அக்/இந்து இளைஞர் மன்றம் - 2000.



இந்து இளைஞர் மன்ற கட்டிடம் - 2006.கொழும்பு திரு.S.செல்வரூபனும் இணைப்பாளரும் நண்பர்களும்





Rotary Club ஆதரவுடன் இந்து இளைஞர் மன்றம் நடாத்திய வைத்திய முகாம் -2003.



வரலாற்று நூல்கள் வெளியீட்டு விழா – 2008.



Advro உதவியுடன் நிவாரணப் பணி – 2010.



நிவாரணப் பணி.



சிவத் தமிழ் விருது – 2011.



யாழ்ப்பாணத்தில் தங்கம்மா அப்பாக்குட்டி விருது பெறுவதற்காக தலைவரை அழைத்து சென்றபோது அமெரிக்க ரிஷி தொண்டு நாதன் மற்றும் ஆறுதிருமுருகன் அவர்களோடு தெள்ளிப்பளை ஆலயத்தில் - 2011.



மன்றத்தின் மூலம் பிரத்தியேகமாக கற்பிக்கப்படும் மாணவர்கள்



அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு சீருடை வழங்கல்.



வறிய வெளி மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்பபுக்கள்




அன்னை சாரதா 150ஆவது விழா ரத பவனி காரைதீவு



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலருக்கு விழா



கண்ணகி இலக்கிய விழா – 2012



சுவாமி விவேகானந்த விழா – 2013



சமாதானத்திற்கான இலங்கைச் சமயங்களின் பேரவை அம்பாரை மாவட்டம் - 2013



அறநெறிப்பாடசாலை மாணவர்கள் - 2013



பாடசாலையில் விவேகானந்த சிலை அன்பளிப்பு



பாலர் பாடசாலை கலை விழா 2013



நூல் வெளியீட்டு விழா



நூல் நிலையத்திற்கான புத்தகங்கள் அன்பளிப்பாகப் பெறல் 2014







**சுவாமி விவேகானந்த விழா - 2014**



தோட்டப் பயிர்ச்செய்கை2014



வாடகைக்கு விடப்படும் கூடாரம் 2014



சுனாமி நினைவுநாள் பிரார்த்தனை 2014



மன்றத்தினால் திருவள்ளுவர் பாடசாலைக்கான காணி அன்பளிப்பு



151ஆவது விவேகானந்தர் விழா 2014



அமெரிக்க ஹாவாய் வேலன் சுவாமிகளின் வருகை



20ஆவது ஆண்டு நிறைவு விழா



சமாதானப்பணி 2014



பண்ணை வயலும் நீர்இறைக்கும் பம்பியும்



நவராத்திரி ஊர்வலம் 2015





மட்/ஸ்ரீ இராமகிருஸ்ணா மிசன் உதவியுடன் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கல் 2015



திராய்க்கேணிப் பாடசாலையில் வெள்ள நிவாரணப் பணி



கல்விப் பணி – 2016.



பாலர் கலை விழா 2016







**யோகாசனப் பயிற்சி முகாம் 2017**



தற்போதைய வயல் காணி 2017



சிறந்த பெறுபேறுகளுடன் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர் கல்வி அன்பளிப்பு



சமூக ஆர்வலர்களுக்கான ஒன்று கூடல் 2017

# பழைய இல்ல மாணவர்கள்



# தற்போதய இல்ல மாணவர்கள்



# தலைவரின் இதயத்தில் இருந்து .....



ஒரு கட்டமைப்பு இல்லாமல் எந்தவொரு பெரிய செயலும் செய்ய முடியாது. அதிலும் ஓர் அமைப்பை உடனடியாக ஆரம்பித்து ஓர் பெரிய செயற்பாட்டை செய்வதென்பது நடைமுறையில் அவ்வளவு எளிதல்ல.

ஒரு சமயம் சுவாமி ஸ்ரீமத் ஆத்ம கனானந்தஜீ அவர்கள் ஒரு நிரந்தர மையத்தை உருவாக்கி முயற்சி செய்யுங்கள் சுயநலம் என்பது எங்களிடம் சிறிதும் இல்லாத போது அம் முயற்சி இறைவனுடைய சித்தமாக மலருகிறது. பணத்தைப் பற்றிய கவலை உங்களுக்கு சிறிதும் வராது என்று கூறினார்.

அன்று முதல் இவ் ஆச்சிரமத்தை ஆன்மீக சாதனைகள் மற்றும் அறிவுப் பண்பாட்டு மையமாகத் திகழ வைக்க வேண்டும் என்பது எமது விருப்பமாக உருப்பெற்றது. இங்கிருந்து எழும் சக்தி உலகம் முழுவதும் பாய்ந்து பரவ வேண்டும். எமது மக்களின் வாழ்க்கைப் போக்கை மாற்றி இந்து சமுதாயத்தை ஒன்று திரட்டி ஓர் உன்னத சமுதாயமாக மாற்ற வேண்டும் என்ற தணியாத தாகம் பொங்கி நாடி நரம்பெல்லாம் பரவி உழைக்கத் தூண்டியது.

எமது உளப்பாங்கை விளங்கிக்கொள்ளாத பலர் விமர்சிக்கவும், கேலி செய்யவும், எதிர்ப்பிரச்சாரம் செய்ததுடன் நிற்காமல் துன்பங்களை உளரீதியாகச் செய்யவும் முனைந்தனர். துன்பங்கள் பெருகப்பெருக எமது உறுதி தீவிரமடைந்தே வந்தது. நாம் எமது பலத்தை எல்லாம் திரட்டி வரிந்து கட்டிக் கொண்டு இந்த இலட்சியத்தை அடைய 25 வருடங்களாக பாடுபட்டு வருகின்றோம்.

இதில் யாரெல்லாம் நம்பிக்கை வைத்தார்களோ அவர்களெல்லாம் பகவானின் அருளினால் ஆத்ம சாந்தியையும், ஆற்றலையும் பெற்றுள்ளார்கள். இவ் ஆச்சிரமத்தை இல்லற வாழ்க்கை என்னும் நிலையில் இருந்தவாறே செயற் களத்தில் இறங்கி பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். கடந்த 25

ஆண்டுகளுக்குள்ளே இத்தகைய ஓர் பேரியக்கம் பல்வேறு இன்னல்களையும் தாண்டி சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது. எதிர்காலத்தில் இந்நிலையத்தின் ஊடாக பொங்கிவர இருக்கின்ற எழுச்சிப் பேரலைகளின் மெல்லிய பேரோசைகள் எம் காதுகளில் ரீங்காரம் இடுகிறது. இது உங்கள் அனைவருக்கும் கேட்கும் என நினைக்கின்றோம்.

சுவாமி விவேகானந்தர் காட்டிய பாதையில் செல்லும் இம் மையத்தை உண்மையான ஆன்மீகத் தாகம் கொண்ட மையமாக அனைவரும் வளர்த்தெடுத்து நம் சமுதாயத்தை ஒரு தலைமையின் கீழ் ஒன்றுபட்டு வாழ வைக்க வேண்டும் என்பதே எமது அவா.

திரு. த. கயிலாயபிள்ளை JP
தலைவர் / ஸ்தாபகர்
இறைபணிச் செம்மல்

தலைவனாக விரும்பினால் அனைவருக்கும் தொண்டனாக இருங்கள் இதுதான் உண்மையான இரகசியம்.

**சுவாமி. விவேகானந்தர்**

இறைவனை இடைவிடாமல் நினைத்துக் கொண்டிருப்பவனுக்கே அவரது இயல்பு என்ன என்பது தெரியும்.

- **பெரியோர் வாக்கு** -

**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch)
40, Ramakrishna Road, Colombo 6.

*Phone - 2588253 & 5013805*
*Email - rkmcey@gmail.com*

# ஆசியுரை

அக்கரைப்பற்று சுவாமி விபுலானந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையம் தனது 25ஆவது நிறைவு விழாவை வரும் ஆவணி மாதம் 19ஆம் திகதி, 2017 அன்று கொண்டாட இருப்பதை அறிந்து மகிழ்வுறுகிறேன்.

இவ் விழா சீரும் சிறப்புடன் நடைபெற எல்லாம் வல்ல இறைவன் தன் அருளையும் ஆசியையும் வழங்க வேண்டுவதோடு, என் அன்பையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

“வாழ்க்கையை உருவாக்கக் கூடிய, மனிதனை மனிதனாக்கக் கூடிய, நல்ல ஒழுக்கத்தை வளர்க்கக் கூடிய கருத்துக்களைக் கிரகித்து, அவற்றை நாம் நம்முடையவையாக்கிக் கொள்ள வேண்டும்” என்று சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார்.

அந்தவகையில் சுவாமி விபுலானந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையத்தைச் சேர்ந்த மாணவர்கள் தங்களுடைய நல்ல ஒழுக்கத்தை மேம்படுத்த வாழ்த்துவதோடு, சுவாமி விபுலானந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் மாணவர்கள் அனைவருக்கும் மும்மூர்த்திகளான பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், தூய அன்னை சாரதா தேவி, சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் அருளையும், ஆசிகளையும் வழங்க வேண்டுவதோடு என் அன்பையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கொழும்பு.
09-06-2017

என்றும் இறைபணியில்
சுவாமி சர்வரூபானந்த
(சுவாமி சர்வரூபானந்த)
தலைவர்

**RAMAKRISHNA MISSION ASHRAMA & CHILDREN HOMES**
**BATTICALOA, SRI LANKA.**
T.P.: 0094 65 2222 752, rkmbat@gmail.com

## ஆசிச் செய்தி

அக்கரைப்பற்றில் அமைந்துள்ள சுவாமி விபுலானந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையம் தனது 25வது ஆண்டு நிறைவினை எதிர்வரும் ஆவணித் திங்கள் 19ம் நாள் நடாத்த இருப்பதாக அறிகின்றேன். அவர்களுக்கு எனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நீ இந்த உலகிற்கு வந்துள்ளாய். ஓர் அடையாளத்தை விட்டுச் செல். இல்லையென்றால் உனக்கும் இந்த மரங்களுக்கும் கற்களுக்கும் என்ன வித்தியாசம்......? அவையும் தோன்றுகின்றன, வாழ்கின்றன, சாகின்றன. அதுபோல் பிறந்து சாவதற்கு மனிதனானவன் விரும்புவானா என்ன? " உங்கள் ஒவ்வொருவரிடமும் எல்லையற்ற சக்தி இருக்கின்றது. அதனை எழுப்புங்கள் என்று முழங்கு. நான் எந்த வேலைகளில் ஈடுபட்டிருக்கிறேனோ அந்த வேலைகளில் உன்னையும் அர்ப்பணம் செய்"** என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

சுவாமி விவேகானந்தர் காட்டிய வழியில் இறைபணிச் செம்மல் திரு.T.கைலாயபிள்ளை அவர்களும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான நலன்புரி அமைப்புக்களையும், கைவிடப்பட்ட குழந்தைகளுக்கான காப்பகத்தையும் அமைத்து கடந்த 25 வருடங்களாக அரும் பெரும் சேவையினைச் செய்து வருகின்றார்.

இவரது சேவை மென்மேலும் சிறப்புற்று நற்பணிகள் பல புரிய எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டுமென இறைவனை வேண்டுவதுடன் தெய்வத் திரு மூவராம் குருதேவர் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர், அன்னை ஸ்ரீசாரதா தேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகியோரது நல்லாசிகளையும் வேண்டி எனது நல்லாசிகளையும் நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி.

**என்றும் இறைபணியில்**

(சுவாமி பிரபுபிரேமானந்தா)
**SWAMI - IN - CHARGE**
**RAMAKRISHNA MISSION**
**RAMAKRISHNAPURAM**
**BATTICALOA.**

Please mention your e-mail address for further correspondence

**This is a branch of the Ramakrishna Mission ; Colombo - 6**
All the official correspondence should be addressed to the General Manager (Swami in-charge)
**Bank:** Bank of Ceylon, **Address:** Govington Road, Batticaloa. **Account Name :** Ashrama,
**Account No.:** 2698511, **Branch ID :** 012, **Bank Swift Code :** BCEYLKLX

**ரிஷி தொண்டு நாதன் சுவாமிகளின்**



# ஆசியுரை

**திருவருள் முன்னிற்க! வணக்கம்**

எல்லாம் வல்ல பரம்பொருளின் கருணையை மனதில் நினைந்து சற்குரு சிவாய சிவ சுப்பிரமுனிய சுவாமிகளின் பாதம் பணிந்து திருமூலர் ''சிவபூமியென'' அழைத்த ஈழவள நாட்டில் கிழக்கு மாகாணத்தில் சைவமும் தமிழும் தழைத்தோங்க சிறார்களை ஆதரித்து நல்வழிப்படுத்தும் சுவாமி விபுலானந்தா சைவச் சிறுவர் இல்லப் பணியானது இருபத்தைந்தாவது ஆண்டு பூர்த்தியடைவதை இட்டுப் பெரும் மகிழ்வடைகின்றோம்.

சுவாமி விபுலானந்தா சிறுவர் இல்லத்தின் சேவையை நேரில் கண்டும், தொலைபேசி வழியாக அறிந்தும், அவர்களின் உயரிய பணியில் என்னையும் ஒரு சிறு பங்காக இணைத்துக் கொண்டேன். கிழக்கு மாகாணத்தில் அடியேன் கண்ட ஒரு ஆனந்தமான செய்தி யாதெனில் நவநாகரீகத்தை நோக்கி எல்லா மக்களும் வேகமாக முன்னேறும் நேரத்தில் கிழக்கு மாகாணத்தில் சைவப் பாரம்பரியம் இன்றும் நிலைத்து நிற்கின்றது. இது எமக்கும் பெரும் ஆனந்தத்தை அளிக்கிறது. இல்லத் தலைவர் இறைபணிச் செம்மல் திரு. த. கயிலாயபிள்ளை அவர்களும், இல்லத்தின் நிருவாக சபையினரும், தொண்டர்களும், செய்யும் சேவை போற்றுவதற்குரியது. அவர்களுக்கு எல்லாம் வல்ல பரம் பொருள் எல்லா நலன்களையும் அருளி, சுவாமி விபுலானந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையமும் அவரும் தம் சேவையில் மேலோங்கி வளர வேண்டும் என இறைவனை வேண்டுகின்றோம்.

இல்லம் 25வது ஆண்டு நிறைவு காண்பது மகிழ்ச்சி. இல்லத்துக்கு நாம் வருடாந்தம் அனுப்பும் நன்கொடையை தொடர்ந்து அனுப்பி வைப்போம். இல்லம் தொடர்ந்தும் சிறார்களின் நலன் கருதி செயற்பட பரம்பொருளை வேண்டுகின்றோம்.

**அன்புடனும் ஆசியுடனும்**
**ரிஷி தொண்டுநாத சுவாமிகள்**
**சற்குரு சிவாய சிவ சுப்பிரமுனிய சுவாமிகள் ஆச்சிரமம்**
**ஹவாய் அமெரிக்கா**



உ

"வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும்"

**அக்கரைப்பற்று பகுதி ஸ்ரீ சித்தி விநாயகர் மகா தேவஸ்தானம்**

**අක්කරපත්තුව ශ්‍රී සිත්ති විනායගර් මහා දේවස්ථානය**

**Akkaraipattu Sri Sithi Vinayagar Divisional Thevasthanam**

| | | |
|---|---|---|
| பதிவு இல } HA/05/AM/85<br>Regd No } 10-11-1981 | வங்கி } க/ கு இல: 1056302 இலங்கை வங்கி<br>Bankers } AC No : C 1056302 Bank of Ceylon | ஸ்தாபிதம் } கி.மு.200<br>Founded } B.C. 200 |

☎ 067-2278570

Akkaraipattu -07,
Sri Lanka.

2017.05.28



## வாழ்த்துரை

சுவாமி விபுலானந்தா சிறுவர் இல்லம் அதன் 25வது ஆண்டு நிறைவு விழாவினை கொண்டாடுவதில் ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான அறங்காவலர்களான நாங்கள் பெருமிதம் அடைகின்றோம். 1985ம் ஆண்டின் பின் யுத்தகால சூழலால் எமது சமூகம் இன்னல்களை அனுபவித்து தாய், தந்தை உறவுகளை இழந்த சிறுவர்களை பேணிப்பாதுகாத்து எதிர்காலத்தில் இவர்களுக்கு நம்பிக்கையூட்ட வேண்டிய தேவை கருதி பிரதேச இந்து இளைஞர் மன்றம், சித்தி விநாயகர் தேவஸ்தான நிருவாகம், ஊர்ப்பெரியார்கள் இணைந்து சுவாமி விபுலானந்தா மாணவர் காப்பகத்தை அக்கரைப்பற்று 07 கிராம சங்க கட்டடத்தில் ஆரம்பித்து, பின் ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்திற்கு உரிய தென் மேற்கு வளாகத்தில் உள்ள காணியில் இல்ல கட்டடத்தை சிறப்பாக அமைத்து, நடாத்தி வந்து தற்போது பாரிய விருட்சமாக வளர்ச்சி பெற்று இந்து சமுதாயத்திற்கு பாரிய சேவையாற்றி வருகிறது. இத்துடன் இதன் அரவணைப்பில் கல்வி பயின்று வெளியான மாணவர்கள் பல துறைகளில் சித்தி பெற்று சமூகத்தில் இணைந்து உயர்வான நிலை பெற்றது சிறப்பானதே. மேலும் இதன் வளர்ச்சி இந்து மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்காகவும் சமூக, கலை, கலாசார வளர்ச்சியிலும் களம் கண்டு பணியாற்றி வருவதையிட்டு நாம் மட்டற்ற மகிழ்ச்சி கொள்வதுடன் மேலும் இதன் பணி சிறக்க ஸ்ரீ சித்தி விநாயகரை வேண்டி வாழ்த்துவதுடன், இக்காப்பகத்தின் பெருவளர்ச்சியில் அதன் தலைவரின் பணி அளப்பெரியது. அவரோடு தோள் நின்று பக்கபலமாக செயலாற்றும் நிருவாகத்தினர் பணி சிறப்பானது, போற்றப்படவேண்டியது. இதற்காக நாம் அனைவரையும் வாழ்த்தி பாராட்டுகின்றோம். மேலும் இந்நிறுவனம் தேவஸ்தானத்திற்கு வழங்கும் ஒத்துழைப்புக்கும், ஆதரவுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதுடன், எதிர்காலத்தில் தேவஸ்தான நிருவாக சபையுடன் இணைந்து இந்து சமூக, கல்வி, கலாசார வளர்ச்சியில் பங்காற்ற வேண்டும் என தெரிவித்துக்கொள்வதோடு, இக்காப்பகம் பாரிய விருட்சமாக வளர்ச்சி பெற பேருதவிகள் புரிந்து வரும் புலம் பெயர் அமைப்புகள், பெரியார்கள், பக்கபலமாக உதவும் நம் நாட்டு நிறுவனங்கள் பெரியார்கள் அனைவருக்கும் இவ்வேளையில் தேவஸ்தானத்தின் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்வதோடு விபுலானந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் 25வது ஆண்டு நிறைவை நாமும் இணைந்து மகிழ்வுடன் வரவேற்று வாழ்த்துகின்றோம்.


- சுபம் -

தலைவர் /ஊர்ப்போடியார்

அக்கரைப்பற்று ஸ்ரீ சித்தி விநாயகர்
பகுதித் தேவஸ்தானம்
பதிவு இல HA/5/AM 85
10. 11. 1981

செயலாளர்
மு. குழந்தைவடிவேல்

ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான அறங்காவலர்கள்
ஸ்ரீ சித்தி விநாயகர் மகா தேவஸ்தானம்
அக்கரைப்பற்று பகுதி
067-2278398



**EXECUTIVE COMMITTEE**

***Chairman***
*MR. T. Joganathan*

***Vice Chairman***
*MRS. S. Kanesarajah*

***Secretary***
*MR. S. Ramachandaran*

***Joint Secretary***
*MRS.S. Sundaralingam*

***Treasurer***
*Mr. N. Balasubramaniam*

***Asst Treasurer***
*Mr. S. Ahthithan*

***Elected Comm. Member***
*Mr P Kanapathipillai*

**BOARD OF TRUSTEES**

***Chairman***
*Mr. S. Abayalingam*

***Secretary***
*Mr. T. Thevaraajan*

*Mr. R. Kanesharajah*
*Mr. S. Premachandra*
*Dr. V. Paramanathan*
*Mr. S. Sri Rangan*
*Dr. A. Thevasagayam*

***Our Motto for 2017-2019***
*Commitment and Respect*

***"Ammanai Saran Addainthal Athika Varamperalam"***

**SHRI KANAGATHURRKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**

*5, CHAPEL ROAD, LONDON. W13 9AE.* TEL: 0208 - 810 0835
Founded on 10-08- 1991 Charity No: 1014409 0208 - 840 0485
www.ammanealing.org Email: info@ammanealing.org



திரு.த.கயிலாயபிள்ளை
இறைபணிச் செம்மல்
தலைவர்
சுவாமி விபுலானந்தர் சிறுவர் அபிவிருத்தி நிலையம்
அக்கரைப்பற்று.
அன்புடையீர்,

ஈழம் தந்த அரிய தமிழ்மணிகளில் ஒருவர் சுவாமி விபுலானந்தர். பிரிவுகள் இல்லாத சாதிபேதங்கள் இல்லாத, வருணபேதங்கள் இல்லாத, ஒரு மனித குலத்தையே சுவாமி விபுலானந்தர் கனவு கண்டார். தமிழருக்குரிய தனித்துவமான கலை இலக்கிய வளர்ச்சியை உணர்த்துவதே அவர் நோக்கு. "தென்னாட்டில் ஊற்றெடுத்த அன்புப் பெருக்கு வட நாட்டில் பரவிய முறை" எனும் கட்டுரையும், யாழ் நூலும், ஆன்மீகத்தையும் தமிழையும் இரு கண்களாகக் கொண்டு வாழ்ந்த பெருமகன் என்பதைக் காட்டி நிற்கின்றது. அவர் வாழ்ந்த காலம் 1892 முதல் 1947 எல்லா வகையிலும் போராட்டக் காலமே.

இப்பெருமகனாரின் நாமத்துடன் அவர்கள் பிறந்து வாழ்ந்த மாகாணத்தில் அவர்களது சிந்தனையின் ஊற்றாக எழுந்ததுதான் சுவாமி விபுலானந்தர் சிறுவர் அபிவிருத்தி நிலையம். அவர்கள் வாழ்ந்த போராட்டக் காலத்திற்கு மிஞ்சியதாக இந்நிலையம் எத்தனையோ போராட்டங்களை வென்று இன்று இருபத்தைந்தாவது அகவையில் நிமிர்ந்து நிற்பது மட்டற்ற மகிழ்வைத் தருகின்றது. அதனையொட்டி விழாவும் மலரும் வரவுள்ளமை பாராட்டுதலுக்குரியது.

இத்தருணத்தில் இச்சிறுவர் நிலையம் உருவாக காரணகர்த்தாக்களாக விளங்கிய அனைவருக்கும் இதன் வளர்ச்சியில் என்றும் அக்கறையுடன் செயல்பட்டு வரும் எல்லா அன்பு உள்ளங்களுக்கும் எல்லாம் வல்ல அன்னை லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் திருவருள் என்றும் நிறைந்திருக்க வணங்கி வாழ்த்துவதுடன்அதனையொட்டி வெளிவரும் இம்மலர் மணம் பரப்ப வாழ்த்துகின்றோம்.

அன்பே சிவம்

என்றும் இறைபணியில்
தா.யோகநாதன்
தலைவர்
நிர்வாக சபை
லண்டன் ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலயம்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு,புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும்
இந்துமத அலுவல்கள் அமைச்சு

## சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு டி.எம். சுவாமிநாதன் அவர்களின் வாழ்த்துச் செய்தி



ஆலையடி வேம்பு சுவாமி விபுலானந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் 25வது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

“சிறுமையிற்கல்வி சிலையிலெழுத்தே” என்ற ஔவையாரின் வாக்கினை நன்குணர்ந்து தமது சமூகத்திலே நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களை ஆதரித்து கல்வியறிவூட்டி நல்ல பிரஜைகளாய் வாழ்வதற்கு சுமார் 25 வருடகாலமாக சேவையாற்றிவரும் சுவாமி விபுலானந்தா சிறுவர் நிலையத்தினரைப் பாராட்டுகின்றேன்.

தான், தனது குடும்பம், தனது குழந்தைகள் என்று ஒவ்வொருவரும் வாழுகின்ற இக்காலகட்டத்தில் பிறர்குழந்தைகளை தம்மக்கள்போற் பேணி, சமய பாடசாலை மூலம் அறநெறிகளையும் போதித்து தொழிற்பயிற்சிகளையும் வழங்கி சிறார்களின் எதிர்கால வாழ்விற்கு ஒளியூட்டும் இவ்வமைப்பின் அங்கத்தவர்கள் அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

சுவாமி விபுலானந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையம் வெள்ளிவிழாகக் கொண்டாடும் இத்தருணத்தில் அவர்கள் சேவை மென்மேலும் விஸ்தீரணமடைய எல்லாவல்லமையையும் இறைவன் அருள்பாலிக்க வேண்டுமென்று பிரார்த்தித்து விழாசிறக்க வாழ்த்துகின்றேன்.

**டி.எம். சுவாமிநாதன்**
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு
மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு

දුරකථනය Telephone தொலைபேசி } 067 2057545
ලිපිනය Address விலாசம் } Cooperative Branch Road, Akkaraipattu - 8/1
ෆැක්ස් Fax தொலைநகல் } 067 2057545 067 2052477
මගේ අංකය My No. எனது இல }
ඔබේ අංකය Your No உமது இல }
දිනය Date திகதி }
පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT
කවීන්දිරන් කෝඩීස්වරන්
கவீந்திரன் கோடீஸ்வரன்
Kaveendiran Kodeeswaran
පාර්ලිමේන්තු මන්ත්‍රී දිගාමඩුල්ල
பாராளுமன்ற உறுப்பினர் திகாமடுல்ல
Member of Parliament Digamadulla

## திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்
## கௌரவ. கவீந்திரன் கோடீஸ்வரன் அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி

உலகின் முதற்தமிழ் பேராசிரியரும், யாழ்நூல் யாத்த முத்தமிழ்வித்தகருமான சுவாமி விபுலாநந்த அடிகளாரின் பெயரைத்தாங்கி இயங்கிக் கொண்டிருக்கும் ''**சுவாமி விபுலாநந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையம்**'' இருபத்தைந்தாவது ஆண்டை பூர்த்தி செய்து வெள்ளிவிழாக் கொண்டாடுவது பற்றி அறிந்தேன். அதன் ஞாபகார்த்தமாக வெளியீடு செய்யப்பட இருக்கும் வெள்ளிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

1992 ஆம் ஆண்டு நல்ல உள்ளங்கள் சேர்ந்து ஐந்து அனாதரவற்ற மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட விபுலாநந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையம், ஆல்போல்தழைத்து அறுகுபோல் வேரூன்றி பெருவளர்ச்சி அடைந்திருப்பதைக்கண்டு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் பேருவுகை கொள்கின்றேன்.

யுத்த அனர்த்தத்தினால் அனாதரவற்ற குழந்தைகளின் காப்பகமாக திகழும் விபுலாநந்தா சிறுவர் இல்லத்தில் உருவாகிய பழையமாணவர்கள் மருத்துவர்களாகவும், பொறியியலாளர்களாகவும், நிருவாகத்துறை சார்ந்தவர்களாகவும் அறிவொளி பரப்பும் ஆசிரியத் திலகங்களாகவும் சமூகத்தில் உயர் நிலை அடைந்திருப்பது, அறிந்து இந்தஇல்லத்தின் நிருவாகத்தினரை பாராட்டுவதில் மனநிறைவு அடைகின்றேன்.

சுவாமி விபுலாநந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையம், மேலும் பல்வகையிலும் உயர் வளர்ச்சி கண்டு சமூகத்தின் கலங்கரை விளக்காக உயர்ந்து ஒளிபரப்பி வழிகாட்ட இறைவனை பிரார்த்தித்து வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

என்றும் மக்கள் சேவையில்
கவீந்திரன் கோடீஸ்வரன்,
பாராளுமன்ற உறுப்பினர்,
அம்பாரை மாவட்டம்.

ඊ මේල් E-mail மின்னஞ்சல் } haniengineeringwork@gmail.com
දුරකථනය Telephone தொலைபேசி } 077 4669696
ලිපිනය Address விலாசம் } No. 03, Weaving Centre Road, Akkaraipattu - 07

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின்
வாழ்த்துச் செய்தி



ஆலையடி வேம்பு சுவாமி விபுலானந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையம் 25வது ஆண்டு நிறைவு விழாக்கொண்டாடும் இவ்வேளையில் எனது வாழ்த்துச் செய்தியைப் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

சமய, கலாசார, பண்பாட்டு விழுமியங்களைப் பேணல் மற்றும் சமய ஒழுக்கம் நிறைந்த நற்பிரஜைகளை உருவாக்கல் என்னும் உயரிய நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட சிறுவர் இல்லம் இன்று சுமார் 65 சிறார்களைப் பராமரித்து வருவது மட்டுமல்லாது வெளியே ஏழ்மைகாரணமாக பாடசாலை செல்லாமல் இடைவிலகிய மாணவர்களை பாடசாலை உபகரணங்கள் வழங்கி அவரகளின் கல்வி நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு ஊக்குவித்து வருகின்றமை பாராட்டுற்குரிய விடயமாகும்.

இல்லச் சிறுவர்களுக்கான அடிப்படைத் தேவைகளைக் கவனித்து கல்வி அபிவிருத்தி, ஆன்மீகப் பயிற்சி என்பவற்றோடு கணனிப் பயிற்சி மற்றும் சாரதிப் பயிற்சிகளாகிய தொழிற்பயிற்சிகளையும் வழங்கி வருகின்றமை ஏனைய இல்லங்களுக்கு ஒரு முன்மாதிரியாகும்.

பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை கல்விகற்கும் ஆதரவற்ற மாணவர்களைப் பேணும் சுவாமி விபுலானந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையம் 25 ஆண்டு பூர்த்தி செய்து வெள்ளிவிழாவினைக் கொண்டாடுகின்ற இத்தருணத்தில், இந்நிறுவனத்தை நன்கு வழிநடத்துகின்ற தலைவர் இறைபணிச் செம்மல் திரு.த. கயிலாயபிள்ளை அவர்களையும் அவரோடு இணைந்து பணியாற்றுகின்ற நிர்வாகக்குழுவினரையும் மனமார வாழ்த்துகின்றேன்.

இல்லச்சிறுவர்களும் நற்பிரஜைகளாய் வளர்ந்து சமூகத்தின் கலங்கரை விளக்குகளாய் மிளிர எல்லாம் வல்ல இறைவனை வேண்டுதல் செய்து வாழ்த்துகின்றேன்.

அ. உமாமகேஸ்வரன்
பணிப்பாளர்

அ. உமாமகேஸ்வரன்
பணிப்பாளர்
இந்து சமய கலாசார
அலுவல்கள் திணைக்களம்,
9-1/1, காலி வீதி, கொழும்பு-04

## வாழ்த்துச் செய்தி



மாகாண ஆணையாளர், நன்னடத்தை மற்றும்
சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்,
கிழக்கு மாகாணம்

சுவாமி விபுலானந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் 25வது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடப்படும் நினைவு மலருக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்கள கிழக்கு மாகாண ஆணையாளர் என்ற வகையில் இம்முயற்சியை பாராட்டுகின்றேன்.

இந்த சிறுவர் அபிவிருத்தி நிலையமானது கடந்த காலங்களில் வறுமை, யுத்தம், சுனாமி மற்றும் பல்வேறு காரணங்களினால் பாதிப்படைந்து, பெற்றோர்களை இழந்து அல்லது கைவிடப்பட்ட நிலையில் உள்ள சிறுவர்களைப் பாதுகாப்பதற்காக திணைக்களத்துடன் இணைந்து பல்வேறு செயற்பாடுகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றது. ''இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள்'' என்ற கருத்திற்கிணங்க சிறுவர்கள் வழிநடத்தப்பட வேண்டியவர்கள். இன்று சிறுவர்களின் பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் அவர்களின் உரிமைகள் தொடர்பாக பல்வேறு மட்டங்களில் பேசப்படுகின்ற முக்கிய பேச்சுப் பொருளாக உள்ளது. அந்த வகையில் சிறுவர்களுக்கான பாதுகாப்பு, பராமரிப்பு, மற்றும் அவர்களின் கல்வி நடவடிக்கைகளை சிறப்பாக பேணிவருவதுடன், அம்பாறை மாவட்டத்தில், ஆண்பிள்ளைகளுக்கென காணப்படும் ஒரேஒரு இந்து சிறுவர் அபிவிருத்தி நிலையமாகவும் தொழிற்படுகின்றது.

கடந்த மூன்று தசாப்தகால யுத்த முடிவின் பின்னர், ஒரு சுமூகமான சூழல் காணப்படுகின்ற நிலையில் ''பிள்ளைகளின் உச்சநலன்'' என்ற தொனிப்பொருளில், பிள்ளைகளின் எதிர்காலநலன் கருதி, அரசகொள்கைகளுக்கு அமைவாக பெற்றோர் அல்லது பாதுகாவலருடன் குடும்ப சூழலில் பிள்ளைகள் வாழ்வதை உறுதிப்படுத்துவதற்காக ''பிள்ளைகளின் நீண்டகால அபிவிருத்தியினை'' இலக்காகக் கொண்டு, இந்த சிறுவர் அபிவிருத்தி நிலையத்திலுள்ள சிறுவர்களை சமூகமயப் படுத்துவதற்கும், மீளிணைப்புச் செய்வதற்கும், திணைக்களத்துடன் இணைந்து செயற்பட்டமைக்கு பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இந்த சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் உள்ள சிறுவர்கள், சகல துறைகளிலும் வெற்றிபெற்று எதிர்காலத்தில் சிறந்த நிலையினை அடைந்து கொள்வதற்கு இறைவனைப் பிரார்த்திப்பதோடு, மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி. S.சுதீஸ்னர்
மாகாண ஆணையாளர்

## நிஜத்தின் நிழலாய் நின்று
## நிலைத்துள்ள உன் நிமிர்வைப்பாராட்டுகின்றேன்



அம்பாறை மாவட்டத்தின் முன்னணி நகரங்களில் ஒன்றாக விளங்கும் அறிவும் வளமும் பரிவும் நிறைந்த மக்கள் வாழும் அக்கரைப்பற்று நகரில் ஏதிலியாக உள்ளவர்களின் எதிர்கால அக்கறை குறித்து சீரிய விழிப்புணர்வு கொண்ட அக்கரைப்பற்று இந்து இளைஞர் மன்றத்தினர் சுவாமி விபுலானந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையத்தினை 1992ல் நிறுவி இறைபணிச் செம்மல் திரு.த.கைலாயபிள்ளை அவர்களின் தலைமைத்துவ வழிநடாத்தலின் கீழ் செயற்படுத்துவது நாம் யாவரும் அறிந்ததே. சமூக நலப்பணிகள், இந்துசமய பண்பாட்டுப்பணிகள் என்ற இரு பிரதான பணிகளை தனது பயணப்பாதையாக வரித்துக் கொண்ட தமது பயணத்தின் வெள்ளிவிழாஆண்டை இவ்வாண்டு பெருமிதத்தோடு கொண்டாடுவது மகிழ்ச்சிக்குரியது.

அறப்பணியிலும் இறைபணியிலும் தமது இலக்கை அடைவதில் இந்த தலைமைத்துவம் கொண்டிருக்கும் உறுதிப்பாடு பாராட்டுதற்குரியது. நலிவுற்ற சிறுவர்களின் எதிர்கால வாழ்வை கட்டியெழுப்பிடுவோம் என்ற விழுமிய நோக்கோடு செயற்படும் சிறுவர் அபிவிருத்தி நிலையமும், இந்து இளைஞர் மன்றத்தினரும் தமது 25ம் வருட வெள்ளிவிழா குறித்து நிஜத்தின் நிழல்கள் என்கின்ற ஒரு அருமையான final ஒன்றை வெளியிட முன் வந்ததனை நான் மனமாரப் பாராட்டுகின்றேன். தமது வளர்ச்சியின் ஆரம்பம் முதலே உதவிக்கரம் தந்த ஒவ்வொருவரையும் நன்றி மறவாத நினைப்போடு அவர்களின் பங்களிப்பை பதிவுசெய்துள்ளதுடன் அந்தநினைவுகளை ஒளிப்படங்களாகவும் பதிவுசெய்திருப்பது பாராட்டுக்குரியது. இல்லத்தின் பணிகளும் இந்து இளைஞர் மன்றத்தின் பணிகளும் எவ்வாறு இந்த மன்றத்தினையும் காப்பகத்தினையும் வளர்ச்சிப் படிக்கு இட்டுச் சென்றது என்பதையும் ஒருவரலாற்று ஆவணமாக எமது மட்டக்களப்பு பண்பாட்டின் பதிவாக வெளிக்கொண்டு வரும் இவர்களது முயற்சிமெச்சுதற்குரியது.

பல்கலைக்கழகக் கல்வியை பெறமுடியாது நிதிநெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கும் பிள்ளைகளிற்கு நிதியுதவியளித்து பல பிள்ளைகள் இன்று இம்மன்றத்தின் ஆதரவோடு உயர்கல்வியைத் தொடர்ந்து வருகின்றார்கள். அத்தோடு

வறுமை நிலையுடன் பள்ளிகளில் பயிலும் பிள்ளைகளுக்கும் தமது நிதியுதவியை வழங்கியதுடன் அவர்களைக் காப்பகத்திற்கு அழைத்து முறையான வசதிகளை அளித்து பல பிள்ளைகள் கல்வி பெறுவதற்கும் இம் மன்றம் ஆற்றிவரும் பணிகளால் இப்பிரதேசத்திலேயே பிறந்த எனக்கும் பெருமைதருகின்றது. என்னுடைய கிராமத்தில் இவ்வாறானதொரு நல்லெண்ணம் கொண்ட அமைப்பும் அதைச் சார்ந்த அன்பானவர்களும் செயற்படுவது கண்டு பெருமையடைகின்றேன்.

இந்தப் பிரதேசத்தின் மைந்தன் என்ற பெருமையுடன் நானும் இந்த மலருக்கு ஆசிவழங்கக் கிடைத்த வாய்ப்பை பெருமையோடு ஏற்றுக் கொள்கின்றேன். ''அன்னயாவிலும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்'' என்ற பாரதியின் வாக்கோடு பாராட்டி நிறைவடைகின்றேன்.

சுந்தரம் அருமைநாயகம்

மாவட்டச் செயலாளர்/அரசாங்கஅதிபர்
கிளிநொச்சிமாவட்டம்.

*இரக்கம் உள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்தமூளை வேலை செய்யக் கூடிய கைகள் ஆகிய இந்த மூன்றும் நமக்குத் தேவை*

- **சுவாமி. விவேகானந்தர்**

*ஒருவனுடைய உயர்வு, அவன் ஈடடியுள்ள*
*பொருள்களால் அடைவதில்லை அவனுடைய அன்பு,*
*பண்பு, ஈகையினால் அளவிடப்படும்-*

- **கன்ஃபூஷியல்**

உ
சிவமயம்
அகில இலங்கை இந்துமாமன்றம்
(இலங்கை இந்துமன்றஅமைப்புகளினதும் ஆலய நம்பிக்கைபொறுப்புகளினதும் ஒன்றியம்)
ALL CEYLON HINDU CONGRESS
(Federation of Hindu Religious Associations and Temple Trusts in Sri Lanka)

தலைவர்
President:
கந்தையாநீலகண்டன்
*Kandiah Neelakandan*
*Phone: 2580807 (Res)*
*2371100 (Off) - Fax : 2371111*
*neela@mnlaw.lk*

பொதுச் செயலாளர்
Hony. General Secretary:
வேலுப்பிள்ளைகந்தசாமி
*VelupillaiKandasamy*
*Phone: 2586620 (Res)*
*Mobile: 071-5349150*
*vkandasami@gmail.com*

பொருளாளர்
Hony. Treasurer:
அ.கயிலாசபிள்ளை
*AbiramiKailasapillai*
*Phone: 2575566 (Res)*
*Fax : 2575472*
*hariomak@gmail.com*

29.05.2017

## வாழ்த்துச் செய்தி



அக்கரைப்பற்று, ஆலையடிவேம்புப் பிரிவில் அமைந்துள்ள **"சுவாமி விபுலாநந்தர் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின்"** 25வது ஆண்டு விழாவிற்கான வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

கடந்த 25 ஆண்டுகளாக சமயத்திற்கும், சமூகத்திற்கும் அரும்பணியாற்றி, இளம் சமூகத்தினரைச் சமய, சமூக ரீதியாக பயிற்றுவித்து எதிரகாலத்தில் நற் பிரஜைகளாக உருவாக்குவதில் **"சுவாமி விபுலாநந்தர் சிறுவர் அபிவிருத்தி நிலையம்"** அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருவதையிட்டு அகில இலங்கை இந்துமாமன்றம் பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கின்றது.

சுவாமி விபுலாநந்தரின் அறிவுரைகளைப் பின்பற்றி தங்களால் மேற்கொள்ளப்படும் இச்சேவைகள் மேன்மேலும் வளரவேண்டுமென்பதே எமது விருப்பமாகும்.

இந்து மாமன்றத்தால் முன்னெடுக்கப்படும் சிவதொண்டர் அணியில் தங்கள் நிலையத்தைச சேர்ந்த சிறார்களும் இணைக்கப்பட வேண்டும் என்பதையும் வேண்டிக்கொள்கிறோம். இது தொடர்பாக எந்நேரத்திலும் எம்மை தொடர்பு கொண்டு எமது அனுசரணையைப் பெற்றுக்கொள்ளலாம்.
**"சுவாமி விபுலாநந்தர் சிறுவர் அபிவிருத்தி நிலையம்"** சைவச்சிறார்களின் எதிர்கால வாழ்விற்கு சகல வழிகளிலும் உதவி புரிய வேண்டுமெனக் கேட்டுக்கொள்வதோடு, தங்கள் அரும்பணி மேலும் சிறப்புற ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

"அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

இறைபணியில்

கந்தையா நீலகண்டன்
தலைவர்.

தலைமையகம்: இல.91/5,சேர். சிற்றம்பலம் ஏ. கார்டினர்மாவத்தை,கொழும்பு– 02, இலங்கை.
Head Office: No 91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha, Colombo – 02, Sri Lanka.
தொ.பேசி/Phone : 2434990 | www.hinducongress.lk | தொ.நகல்/Fax : 2344720
hinducongress@gmail.com

ප්‍රා. ලේකම් දු.ථ/ෆැ
பி. செயலாளர் தொ.பே/பெக்ஸ்
Div. Secretary Tel/Fax 067-2277436

**ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය, ආලයඩිවේම්බු**
**பிரதேச செயலகம், ஆலையடிவேம்பு**
**DIVISIONAL SECRETARIAT, ALAYADIVEMBU**

පොදු
பொது
Gen 067 - 2277436

489

**Your No.** **My No.** **Date:**

*05.07.2017*

### வாழ்த்துகின்றேன் பணி தொடர...

எனது நிருவாகப் பிரிவிற்குட்பட்ட ஆலையடிவேம்பு பிரதேச செயலகப் பிரிவினுள் இயங்கிவருகின்ற சுவாமி விபுலானந்தா சிறுவர் இல்லம் கடந்த *27.01.2017* ஆம் திகதியுடன் கால் நூற்றாண்டையும் தாண்டி தனது சிறப்பான பணியினை ஆற்றிவருகின்றமை குறித்து மிகுதியாக மகிழ்வுறுகின்றேன். இன முரண்பாடுகள், உள்நாட்டு யுத்தச் சூழல், சுனாமி பேரழிவு போன்ற அசாதாரண சூழ்நிலைகளால் தமது தாய், தந்தையரை இழந்த சிறுவர்களுக்கு மட்டுமல்லாது வறுமைக் கோட்டின் கீழ் வாழும் சிறுவர்களுக்கும் இவ் இல்லம் ஒரே புகலிடமாகவும், தமது வாழ்வைப் பாதுகாப்பாக வாழக்கூடிய, கல்வி மற்றும் சமய நற்பண்புகளை வளர்த்தெடுக்கக்கூடிய ஒரு இடமாகத் திகழ்ந்து வருகின்றது. இவ்வாறான ஒரு மாணவர் இல்லத்தினை நடாத்துவது, நிருவகிப்பது என்பது ஒன்றும் இலகுவான காரியமல்ல. பல்வேறு பரோபகாரிகள், தனவந்தர்கள், ஆலையடிவேம்பு பிரதேச செயலகம், இந்து கலாசாரத் திணைக்களம், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் போன்ற அரச நிறுவனங்களின் நிதி மற்றும் ஆலோசனை உதவிகளுடாக வெகு சிறப்பாக நிருவகிக்கப்பட்டு வருகின்றது. இதில் *5* வயது தொடக்கம் *13* வயது வரையான சிறுவர்கள் இணைக்கப்படுகின்றார்கள். எனது பிரதேச செயலகப் பிரிவான ஆலையடிவேம்பு மட்டுமன்றி அம்பாறை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலிருந்தும் தமது தாய், தந்தையரை இழந்த மற்றும் இன முரண்பாடுகள், உள்நாட்டு யுத்தச் சூழல், சுனாமி பேரழிவு போன்ற அசாதாரண சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட குடும்பப் பின்னணிகளைக் கொண்ட சிறுவர்கள் இணைக்கப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றனர். கடந்த காலங்களில் இங்கிருந்து பராமரிக்கப்பட்டு, கல்வி கற்று வெளியேறிய பலர் பட்டதாரிகளாகவும், அரச உத்தியோகத்தர்களாகவும், நற்பிரஜைகளாகவும் சமுகத்தில் வாழ்ந்து வருவது இவ்வில்லம் ஆற்றிவருகின்ற மகத்தான பணிகளுக்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகும். சுவாமி விபுலானந்தா சிறுவர் இல்லத்தின் ஆரம்ப காலந்தொட்டு இன்றுவரை தலைவர்களாகவும், பணிப்பாளர் மற்றும் அவை உறுப்பினர்களாகவும் இயங்கிவருகின்ற நல்லுள்ளங்களையும் இவ்விடத்தில் பாராட்டுதல் சிறப்பு. இந்த *25* வருடங்களைத் தாண்டி மேலும் இவ் இல்லத்தின் மகத்தான பணிகள் சிறப்பாகத் தொடர இந்நாளில் ஒரு பிரதேச செயலாளராக இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

வே. ஜெகதீஸன் (இ.நி.சே)
பிரதேச செயலாளர்
பிரதேச செயலகம்
ஆலையடிவேம்பு

**வேதநாயகம் ஜெகதீஸன்**
**(இ.நி.சேவை – *1*)**
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
ஆலையடிவேம்பு.

ගණකාධිකාරී දු.ථ/ෆැ
கணக்காளர் தொ.பே/பெக்ஸ்
Accountant Tel/Fax 067 2278046

පරිපාලන නිලධාරී දු.ථ
நிரு.உத்தி. தொ.பே
Admin. Officer Tel 067 3690878

සහකාර සැලසුම් අධ්‍යක්ෂ දු.ථ
உ. திட்டமிடல் பணி. தொ.பே
Asst. Director of Planning Tel 067 2279153



# ஆசிச் செய்தி

சுவாமி விபுலானந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையம் தனது 25ஆம் ஆண்டு நிறைவையொட்டி வெளியிடப்படும் நினைவு மலருக்கு ஆசிச் செய்தி வழங்கக் கிடைத்தமைக்கு கிழக்கு மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் கீழுள்ள அக்கரைப்பற்று நன்னடத்தை அலுவலகத்தின் பொறுப்பதிகாரி என்றவகையில் மகிழ்ச்சியடைகின்றேன், வல்ல இறைவனை புகழ்கின்றேன்.

எமது கிழக்கு மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு செயற்படுவதுடன் திணைக்களத்தினாலும் ஏனைய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் தனிப்பட்ட கருணை உள்ளம் கொண்டவர்களாலும் வழங்கப்படுகின்ற உதவிகளை கொண்டு நீதிமன்ற கட்டளைக்கமைவாகவும் கிழக்கு மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளரின் அனுமதிக்கமைவாகவும் இணைக்கப்படுகின்ற ஆதரவற்ற, கைவிடப்பட்ட, பாதிக்கப்பட்ட, பாதிக்கப்படக்கூடிய, வறுமையான சிரார்களுக்கு புணர்வாழ்வழிப்பதினூடாக அன்பு, அரவணைப்பு, கல்வி, பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு வழங்கி அவர்களை சமூகமயப்படுத்துவதற்கு உதவுகின்ற இந்த சுவாமி விபுலானந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் பணி மிகவும் பாராட்டுக்குரியதாகும்.

சமூகத்தில் எல்லோருக்கும் எல்லாப்பாக்கியங்களும் கிடைப்பதில்லை. அந்தவகையில் இந்தப் பாக்கியமானது இந்த சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் முகாமையாளர் இறைபணிச் செம்மல் திரு த.கயிலாயப்பிள்ளை அவர்களுக்கும் இந்நிறுவனத்தில் பணியாற்றிய, பணியாற்றுகின்ற அனைவருக்கும் கிடைக்கப் பெற்றுள்ளதோடு இதற்கான நற்கூலியை வழங்குவதற்கான தகுதி இறைவனுக்கு மாத்திரமே உள்ளது.

எனவே 25 ஆண்டுகளில் மிக உன்னதமான பணிகளை ஆற்றியுள்ள சுவாமி விபுலானந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையம் எதிர்காலத்தில் நிறைவான வளங்களோடு இவ் அருள்மிகு பணியை தொடாச்சியாக முன்னெடுத்து செல்வதற்கு வல்ல இறைவனை பிரார்த்தித்து அதற்காக எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜனாப். எம்.என்.எம்.றபாஸ்,
பொறுப்பதிகாரி,
நன்னடத்தை அலுவலகம்,
அக்கரைப்பற்று.



# வாழ்த்துச் செய்தி

உறவுகளை இழந்து வறுமையில் வாடும் சிறுவர் சிறுமிகள் நலனைக் குறிக்கோளாகக் கொண்டு அம்பாரை மாவட்டத்தில் இயங்கிவரும் சுவாமி விபுலானந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையம் 25வது ஆண்டு நிறைவுவிழாவினை கொண்டாடுவதுபற்றி மிகமகிழ்ச்சி அடைகிறோம்

சாந்தி சமாதானம் சமுகநலம் என்ற தூரநோக்குடன் எமது இணையத்தின் செயல்பாடுகளுக்கு பலவகையிலும் தமது ஒத்துழைப்பை வழங்கி 25வது ஆண்டில் காலடி எடுத்துவைக்கும் சுவாமி விபுலானந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையம் மேலும் தமது பணிகளைத் தொடர்வதற்கு எமது இணையத்தின் அங்கத்துவ அமைப்புகளின் சார்பில் எமது வாழ்த்துக்களை கூறிக் கொள்வதில் பெருமிதம் அடைகிறோம்.

வாழ்க சுவாமி விபுலானந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையம்!
வாழ்க அதன் தாபகர் திரு. த. கையிலாயபிள்ளை அவர்கள்.!

**திரு. வி. பரமசிங்கம்**
**தவிசாளர்**
**அம்பாரை மாவட்ட அரசசார்பற்ற அமைப்புகளின்**
**இணையம்.**

# திக்கற்றவர்களுக்கு ஓர் கலங்கரை விளக்கம்

**“திக்கற்றவருக்கு தெய்வமே துணை”**

கடந்த 30 வருடகால யுத்தம், இடம்பெயர்வு, பொருளாதார நெருக்கடி போன்றன எம் மக்கள் வாழ்வைச் சிதைத்துள்ளது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவப்பல்வேறு அமைப்புக்கள் தோற்று விக்கப்பட்டது. இவற்றில் ஒன்றுதான் திரு. த. கைலாயபிள்ளை அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட விபுலானந்தர் சிறுவர் இல்லம். இவ் இல்லம் அளப்பரிய சேவைகளை ஆற்றி பல சிறுவர் வாழ்வை மேம்படுத்தியுள்ளது. திக்கற்றவர்களுக்கு கலங்கரை விளக்காக இவ் இல்லம் செயலாற்றியுள்ளது.

சைவசமயநெறியில் சிறுவர்களை உருவாக்குவதில் இவ் இல்லம் சாதனை படைத்துள்ளது. சமய விழாக்களை நடாத்துதல், சமய பெரியார்களை கௌரவித்தல், கல்வியறிவை மேம்படுத்தல் போன்றவற்றுடன் பல்வகை சமூகப்பணிகளையும் ஆற்றியுள்ளனர். உலகெங்கும் வாழும் தமிழ் மக்களுக்கு நன்கு பரிட்சயமான முறையில் இவர்கள் சேவை அமைந்ததால் பலரது பல்வகை உதவிகள் இவர்களுக்கு கிடைத்துள்ளன.

திரு.கைலாயபிள்ளை அவர்களின் இடையறாத முயற்சியின் விளைவுதான் இவ் அமைப்பின் 25 வருடசேவையெனில் அதுமிகையல்ல.

இவ் இல்லமானது கிழக்கின் கலங்கரை விளக்காய் ஒளி வீசிப் புகழ் பெற எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். திக்கற்ற பிள்ளைகளுக்கு தெய்வமாய் தொண்டாற்றும் திரு.கைலாயபிள்ளை அவர்கள் நீண்ட ஆயுள் ஆரோக்கியமாய் வாழநாம் அனைவரும் வாழ்த்துவோமாக!

நன்றி


சமூக ஜோதி
திரு.ச.செந்துராசா
ஸ்தாபகர்
SOND, SWOAD
Ampara NGO Consortium
Mob : 077 331 4262
E-mail : senthu@eureka.lk

# JAI HOSPITAL

No: 71, Ampara Road, Akkaraipattu-08

Regd No: PHSRC/PH/205

Phone: 067-2052414, 067 4924302, 067 4924301
Email: thevarajan1234@gmail.com




## வாழ்த்துகின்றேன்

அக்கரைப்பற்று மண்ணில் இப்படியானதொரு சேவை செய்யக்கூடிய, பயன்தரக்கூடிய, புண்ணியமான செயலாக இந்த இல்லம் இருப்பது அனைவரினதும் பாக்கியமே......

வெள்ளிவிழா காணும் இந்த வெற்றிக்காக பாடுபட்ட அனைவரையும் மனதார வாழ்த்தி அவர்களின் சேவை மென்மேலும் இந்த இல்ல வளர்ச்சிக்காக கிடைக்க வேண்டும் எனவேண்டிக்கொள்கின்றேன்.

1992ம் ஆண்டு மிகவும் இக்கட்டான அந்தக் காலகட்டத்தில் அமரத்துவம் அடைந்த எனது கணவர் DR.M.தேவராஜன் அவர்களும் இந்த இல்லம் ஆரம்பிப்பதில் பெரும் பங்காற்றியவர் எனப் பெருமைப்படுகின்றேன். இவ்வில்லத் திற்கான ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்ததிலும் அதை அமைத்ததும் பெருங்கதை, அந்தவேளையில் ஒரு குழந்தையைத் தத்தெடுக்கும் அளவிற்கு அவரது சேவையுள்ளம் இருந்தது என்பதை நினைவு கூறுகின்றேன். எனது பங்களிப்பை அவருடன் ஒரு மருத்துவராக மட்டும் அல்ல குழந்தைகளின் நலனுக்காக அன்பான சேவையாக செய்யக்கூடியதாக இருந்ததை எண்ணிப் பார்க்கிறேன். சந்தோஷப்படுகின்றேன்.

மக்கள் சேவை மகேசன் சேவையென வாழ்ந்த எனது கணவரின் ஒரு கனவுதான் இந்த இல்லம்.

இந்த இளம் உள்ளங்களின் தேவைகளை உணர்ந்து சேவையாக அவர்களின் எதிர்கால வாழ்விற்காக அனைவரும் பாடுபட முன்வர வேண்டும். இதில் சுயநலமோ, சுயவிளம்பரமோ தேவையில்லை என நான் நினைக்கின்றேன். அக்கரைப்பற்று மண்ணில் இப்படியானதொரு சேவை செய்யக்கூடிய, பயன்தரக் கூடிய, புண்ணியமான செயலாக இந்த இல்லம் இருப்பது அனைவரினதும் பாக்கியமே.

வாழ்க! வளர்க!

Dr. சித்திரா தேவராஜன்
Jai Hospital - அக்கரைப்பற்று.

40 Years of Service

Dear T Kailayapillai
President / SVCD

13.06.2017

**Swami Vipulananda Children Development Centre Akkaraipattu Sri Lanka**

It gives me immense pleasure to send this message of felicitation on your silver jubilee celebrations in August this year.

From very small beginnings you have taken a lot of steps forward and for the care of children under your care in the Eastern province in Sri Lanka.

People around the world admire the work done by your organisation under your watch and guidance – the future that you have given all the boys from your home over the years. These young men are now important part of society in Sri Lanka.

Well done and I congratulate all your efforts which have borne fruit and wish you every success in the future.

I am pleased to note the SCOT has been involved in your progress for many years.

Yours Sincerely

Dr E. Velauthapillai
President

| President | Secretary | Treasurer | Projects Officer |
|---|---|---|---|
| Dr E Velauthapillai | Ms V Sankaralingam | Mr AB Alphonsus | Mr M Rudran |
| Brindhaven | 106 Adelaide Road | 34 Davenham Avenue | 64 The Avenue |
| Stow Road | West Ealing | Northwood | Hatch End |
| Sturton By Stow | London | Middlesex | Middlesex |
| Lincoln LN1 2BZ | W13 9EB | HA6 3HQ | HA5 4TT |
| Tel. 01427 787043 | Tel. 020 8579 7986 | Tel. 01923-826019 | Tel. 07926379565 |

Registered UK Charity No: 274499 Founded 1977 www.scot-uk.org.uk

**ஒவ்வொரு ரூபாய்களுக்கும் கணக்கு விபரங்கள்**
**நிர்வாகத் திறமை .....**

# HELPING HANDS



ஏழைகளின் கண்களில் கடவுளைக் காணலாம் என்பது எவ்வளவு சான்றுள வார்த்தை என்று அனுபவ மூலமாக நாம் ஒவ்வொருவரும் உணர்ந்திருக்கிறோம். இந்த உண்மையை உணர்ந்தவர்கள் தான் சுவாமி விபுலானந்தா சிறுவர் அபிவிருத்தி நிலைய சான்றோர்களும் அவர்கள் முன் நின்று சகலவற்றையும் ஒழுங்குபடுத்தி இத்தனை ஆண்டுகளும் சேவை மிக்க நிறுவனமாக நடாத்தி வரும் பாராட்டுக்குரியவரான அதன் தலைவர் திரு.த.கயிலாயபிள்ளைJP அவர்களும்.

இத்தகையதொரு தரும ஸ்தாபனத்தை 25 ஆண்டுகள் சிறு தடங்கலுமின்றி நடாத்தி வருவதென்பது மிகவும் பாராட்டுதலுக்குரியது.

UK, Norway இல் இயங்கி வரும் உதவும் கரங்கள் ஆகிய நாம் சுமார் 20 வருடங்களிற்கு முன்னர் சுவாமி விபுலானந்தா இல்லத்தினருடன் தொடர்பினை ஏற்படுத்திக்கொண்டோம்.

புலம் பெயர்ந்து வாழும் நாம் எமது தாய் நாட்டிற்கு ஏதாவது ஆக்க பூர்வமான உதவிகளை வழங்க வேண்டும் என்று எப்போதும் துடிப்பதுண்டு உதவி வேண்டி நிற்பவர்கள் எல்லோரும் உண்மையோடு நடந்துகொள்வதில்லை என்ற கசப்பான உண்மைகளும் இவ்விடத்தில் ஞாபகப்படுத்த வேண்டும்.


அந்தவகையில் திரு.கயிலாயபிள்ளை ஐயா அவர்களிடத்தில் எனக்கு பிடித்த பண்பு உண்மையை உண்மையாக சொல்லிக் கிடைக்கும் ஒவ்வொரு ரூபாய்களுக்கும் கணக்கு விபரங்கள் முதற் கொண்டு அறிக்கைகளையும் அவ்வப்போது அறிவிக்கும் நிர்வாகத் திறமையை உதவும் கரங்கள் சார்பில் பாராட்டி நிற்கின்றேன்.

சிறு துளி பெரு வெள்ளம் என்பார்கள். 1995 ஆம் ஆண்டளவில் நாம் சிறுக சிறுக சேர்த்த தொகையிலே 10 ஏக்கர் வயல் நிலத்தை 10 லட்சம் ரூபா

துணைகொண்டு பெற்றுக் கொடுத்தோம். இதனை நாட்டிலே ஏற்பட்ட போர்ச் சூழல் காரணமான அங்கு வந்து பார்வையிடும் பெருங் கருணை சென்ற வருட சித்திரை மாதம் தான் எனக்கு கிட்டியது. பிரமித்து விட்டேன். இதற்கு உறுதுணையாக இருந்த ஒவ்வொரு வரையும் பாராட்டுகின்றேன்.

இறைவன் துணையோடு இன்னும் பல ஆண்டுகள் நிலையாக இருந்து சேவையாற்றிட அக்கரைப்பற்று விபுலானந்தா சிறுவர் அபிவிருத்தி நிலைய அத்தனை உள்ளங்களுக்கும் உதவும் கரங்கள் சார்பில் எனது வாழ்த்துக்கள்.

நட்புடன் சந்திரமோகன் சின்னத்தம்பி
உதவும் கரங்கள்
HELPING HAND
FOUNDER CO - ORDINATOR
UK-NORWAY.



எவனுடைய இதயம் ஏழைகளுக்காக இரத்தம் வடிக்கிறதோ அவனையே நான் மகாத்மா என்பேன். மற்றவர்கள் துராத்மாக்களே...

**சுவாமி. விவேகானந்தர்**

**எந்தை அருளால் எதுவும் வசமாகும்**



25th Anniversary Greeting

25 ஆண்டுகளைக் கடந்து, இன்று வெள்ளி விழாக் காணும் சுவாமி விபுலானந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் வளர்ச்சி கண்டு நாம் பேருவகை கொள்கின்றோம். போர் அனர்த்தங்களினால் உறவுகளை, உடமைகளை இழந்த, வாழ வழியற்றுத் துன்புற்று இருந்த இளம் முல்லைகளின் வாழ்வை வளப்படுத்தும் முகமாகச் சுத்த மனத்தோடும், தொண்டு செய்யும் ஊக்கத்துடனும் இணைத்த சேவையாளர் களின் சோம்பலில்லாத உழைப்பே இந்த வளர்ச்சியின் ஆணிவேர்கள் என்பது வெள்ளிடை மலையாகும். “தோல்விக்குத் தோல்வி கொடுத்து விடு” என்ற கீதா வாக்கியத்தை மெய்ப்படுத்திய இல்லத் தலைவருக்கும், அவர் சார்ந்த சேவையாளர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

இறைவனின் மக்களாகிய இந்த இல்லத்துப் பிள்ளைகளே!, வைரத்தை மிஞ்சும் நெஞ்சம் கொண்டு, வேதனைகளைத் துடைத்தெறிந்து நீங்கள் சாதனைகளைப் படைத்திருக்கிறீர்கள். மேலும், நீங்கள் தொடர்ந்தும் இவ்வாறே சாதனைகளைப் படைக்க வேண்டும். நிச்சயமாகப் படைப்பீர்கள். “எந்தை அருளால் எதுவும் வசமாகும்” இறை எங்கள் பக்கமெனின், எவர் எதிர்பக்கம்? என்பதனை மனதிற் கொள்ளுங்கள்.

இந்த விபுலானந்த இல்லமானது மென்மேலும் கிளைகளைப் பரப்பி, நிழல் தரும் சோலையாக மிளிர்ந்திட எமது இதயங் கனிந்த வாழ்த்துக்கள்.

**திரு.திருமதி. விஜயகுமார்**

# Optima Foundation - Poverty Relief

*(Associate Partner: International Children's Medical Aid – UK Charity No: 1072509)*

**Web: www.optimafoundation.org**

***ENABLING CHILDREN TO EXCEL BY DISABLING THEIR LIMITATIONS***

**25th Anniversary Celebration** Date: 31st May 2017

First of all, our sincere wishes to all the children, members of the managing committee, teachers and carers of Swami Vipulananda Children Development Centre (SVCDC) on their 25th Anniversary Celebrations on the 19th August 2017.

In its 25 year history, SVCDC had to face many challenges both man-made and the nature intended. However, through its resolute SVCDC has survived and thrived.

Since 1998, we have developed a close association with SVCDC and were able to provide both the financial and knowledge-based support for the betterment of children's welfare.

Our multi-dimensional support included special celebratory meals, educational tours, repairing the buildings, improving the children's play area and finally and most importantly the development of an integrated, self-sustaining farm.

Our regular visits from the UK also provided opportunities for the interchange of ideas and knowledge to boost the morale of the children.

Hence, we take pleasure in associating ourselves in this remarkable celebration.

***"Every child needs a helping hand, or he / she will grow up to be an angry young man / woman."***
Elvis Presley – The singer / musician

Let our prayers be with SVCDC on this celebratory year so that they could carry on as the "helping hand" to children in need.

Dr. Thomas Jeyendran
Managing Trustee

**25 Oxford Avenue, St. Albans, Herts, AL1 2NS, UK**
**Tel/ Fax: +44 (0) 1727 841468, Email:optimafoundation@yahoo.co.uk**

Amparai District Vipulananda
Rehabilitation Organisation (U K)
181 Norbury Avenue, Thornton Heath, Surrey, CR78AP Phone: 0208 6793369 / 07957550388,
www.advro.org, Email: info@advro.org, Charity No: 1128912

# வெள்ளிவிழா வாழ்த்துச்செய்தி

"காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

காலத்தின் தேவையறிந்து செய்யும் சேவையே மகத்தானது. கடந்த துர்ப்பாக்கியமான போர்க்கால சூழலில் பெற்றோரை இழந்து நிர்க்கதியாக, வாழவழியின்றி, பட்டினியால் வாடிவதங்கிய பச்சிளம் குழந்தைகளை அரவணைத்து, வாழ்வளித்து அக்கரைப்பற்றில் ஒரு சரணாலயமாக விளங்கிவருகின்றது **விபுலானந்தர் மாணவர் இல்லம்** என்று சொன்னால் மிகையாகாது.

இங்கு பராமரிக்கப்பட்ட குழந்தைகள் நல்லொழுக்கம், கல்வி, தொழில்கல்வி என்பவற்றில் பயிற்றப்பட்டு பல்கலைக்கழகங்கள் வரை சென்று உயர்கல்வியைப் பெற்று, இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக அமைத்துள்ளனர் என்பது ஒரு பெருமைக்குரிய விடயமாகும்.

இக்கட்டான சூழ்நிலையில், பல போராட்டங்களுக்கும் சோதனைகளுக்கும் முகம் கொடுத்து சாதனை படைத்து, இருபத்தைந்து ஆண்டுகள் சேவை புரிந்து 19-08-2017 அன்று **விபுலானந்தர் மாணவர் இல்லம்** தனது வெள்ளிவிழாவைக் கொண்டாடுவதையிட்டு "அட்வறோ" அமைப்பானது புழகாங்கிதம் அடைகின்றது. இன்றைய இந்நிகழ்வுக்கு சரியான தலைமைத்துவமும், முயற்சியும், துணிச்சலும், அர்ப்பணிப்பு மனப்பான்மையும் கொண்ட சிறப்பாக இயங்கிவரும் நிர்வாக அமைப்பினர்களும், பொதுநலன்விரும்பிகளும், அக்கரைப்பற்று மண்ணின் மைந்தர்களும், புலம் பெயர்ந்தாலும் தாய்மண்ணை மறவாமல் சேவையாற்றும் தொண்டர் நிறுவனங்களும்தான் காரணம் என்று சொல்வது சாலச் சிறந்த உண்மையாகும்.


கடந்த காலங்களில் சுனாமி, வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கை அனர்த்தங்களின்போது ADVRO அமைப்பினது நிவாரண பொருட்கள், பாதிக்கப்பட்ட மக்களுக்கு சென்றடைவதில் பெரும் பங்காற்றிய, தனது வாழ்வை விபுலனந்தர் மாணவர் இல்லத்திற்காக முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட, தலைவர் திரு த. கைலாயபிள்ளை அவர்களுக்கும், செயல்திறமை மிக்க நிர்வாக சபையினருக்கும் இன்நன்நாளில் எங்களது அமைப்பினது மனமார்ந்த நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இனிவரும் காலங்களில் பணிகளை தேவைக்கேற்ப விரிவுபடுத்தி இலங்கையிலே தற்போது முதன்மை நிலையில் இருப்பதுபோன்று பல்லாண்டு, பல்லாண்டு காலம் சிறப்பாக இந்நிறுவனம் நிலைத்து நின்று சேவையாற்ற இறைவனை வேண்டியும் எங்களது மனமார்ந்த வாழ்த்துக்களையும், நன்றிகளையும் அம்பாறை மாவட்ட விபுலானந்த புனர்வாழ்வுக் கழகம் (U.K) சார்பில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வாழ்க வளமுடன்!

Dr. T. பெரியசாமி
தலைவர்
அம்பாறை மாவட்ட விபுலானந்த புனர்வாழ்வுக் கழகம் (U.K)

President: Dr.T.Periyasamy, Secretary: Mr. E.Mathivanan, Treasurer: Mr.V.Govi,
Vice President: Mr.S.Jeganathapillai, Assistant Secretary: Miss. M. Jeganathapillai, Assistant Treasurer: Mr.K.Thiyagarajah,
Committee Members: Mr.K.Rajadurai (Cultural Secretary), Mr.E.Kalaivanan, Mr.K.Thananayagam, Mr.P.Sukumar, Co opted members:
Mr.N.Sathananantham, Mrs.K.Thiyagarajah



## வாழ்க நற்பணி வளர்க
## மனித நேயம்

சுவாமி விபுலாநந்தா சிறுவர் இல்லம் தங்கள் 25ஆவது ஆண்டு நிறைவை வரும் ஆவணித்திங்களில் சிறப்பாக கொண்டாடி மகிழ எமது இனிய மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் உவகை அடைகின்றோம். தங்கள் அனைவரையும் நேரில் சந்திக்கும் பாக்கியம் கடந்த ஆண்டு கிடைக்கப்பெற்றதற்கு கடவுளுக்கு நன்றி சொல்கின்றேன்.

வாழ்க நற்பணி வளர்க மனித நேயம் தொடரட்டும் குழந்தைகளின் அன்பும் பராமரிப்பும்

அன்புடன் சுமதி அசோக்குமார் குடும்பம்

பணத்தை விட அறிவும், அறிவைவிட ஒழுக்கமும் உணர்வானவை
- **ஹயூம்**

தீவிர நம்பிக்கை இருந்தால் தேடும் பொருள்கிடைத்தே தீரும்
- **ஸ்ரீராமகிருஷ்ணர்**

உலகம் மாறவேண்டும் என்றால் நீமுதலில் மாற வேண்டும்
- **ஓர்அறிஞர்**

# சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கை

சுவாமி விபுலானந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையம், அக்கரைப்பற்று.

நாம் மேற்படி நிலையத்தின் கணக்குகளை கடந்த ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் ஆய்வினை மேற்கொண்டிருந்தோம். இதன்படி நிலையத் துக்கான வரவு செலவுகள் மற்றும் சொத்துகள் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டிருந்தன 2016ஆண் ஆண்டில் மேற்படி நிலையத்துக்கு வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நலன் விரும்பிகள், வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிறுவனங்கள், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைனய் திணைக்களம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், மற்றும் சமூர்த்தி ஆகியன பல்வேறுபட்ட அன்பளிப்புக்களையும், நிதிகளையும் வழங்கியிருந்தன.

எமது பார்வையில் மேற்படி 2016ல் வழங்கப்பட்ட நிதிகள் போதாமையாக இருக்கிறது. இங்கிருக்கும் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் மேலும் வலுவாக்கப்பட வேண்டியுள்ளதுடன் பிள்ளைகளுடைய இருப்பிட மற்றும் ஏனைய கல்வி சார்ந்த விடயங்கள் அபிவிருத்தி செய்யப்படவேண்டியுள்ளது 2015ஐ காட்டிலும் 2016இல் நிலையம் குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சியடைந்துள்ளமை நிதிக்கூற்றுக்களை ஆய்வு செய்ததன் அடிப்படையில் எமக்கு புலனாகின்றது.

பிள்ளைகளுக்கான கல்வி, சுகாதாரம் மற்றும் ஏனைய செலவுகள் கடந்த காலத்திலும் காட்டிலும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றமை கண்கூடு. ஆகவே நிலையம் மேலும் முயற்ச்சிகளை மேற்கொண்டு இதற்கு தேவையான நிதியினைப் பெற்றுக் கொண்டு பிள்ளைகளுடைய தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

கடந்த ஆண்டுகளுடன் ஒப்புடுகையில் நிலையத்தி கட்டிட பராமரிப்புச் செலவுகளும் அதிகரித்துள்ளது. பிள்ளைகளின் நலன் கருதி நிலையத்திற்கு புதிய கட்டிடத் தொகுதியொன்று அமைக்கப்பட வேண்டியுள்ளது அவசியமாகின்றது. அதற்கான நிதி வசதிகளை நலன் விரும்பிகள் வழங்கி பிள்ளைகளை ஆரோக்கியமான கல்வியாளர்களான உருவாக்க வேண்டும். 2016ஆம் ஆண்டிலும் இந்து இளைஞர் மன்றம் தாம் விளைவிக்கும் சகல நெல் விவசாய உற்பத்திகளை நிலையத்திலுள்ள பிள்ளைகளின் உணவுக்காக வழங்கியிருக்கின்றது.

மேலும் நிலையத்தின் முகாமைத்துவ சபை 2016ஆம் ஆண்டிலும் சிறப்பாக செயற்பட்டுள்ளமை அவர்களது ஒவ்வொரு முயற்சிகளிலிருந்தும் புலனாகின்றது. இதற்கு மிகச்சிறந்த உதாரணம் இசங்குச்சேனையிலுள்ள வயல் நிலமொன்றை வெளிநாட்டு நிறுவனமொன்றின் உதவியுடன் பிள்ளைகளின் உணவுத்தேவைக்காக கொள்வனவு செய்யும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் முகாமைத்துவ சபை மேலும் நெறிப்படுத்தப்பட்டு பிள்ளைகளின் நலன்சார் விடயங்களில் செயற்பட வேண்டும்.

**பட்டய கணக்காளர்கள் - கொழும்பு**

# 25 வருடங்களில் உள்ளந் திறந்து உதவிய அன்பர்களுக்கு எமது பாதகாணிக்கைகள்

இந் நிலையத்தின் ஆரம்பம் முதல் இறுதிவரை அனைத்து நிகழ்வுகளையும் தொட்டுச் செல்ல பல பக்கங்கள் தேவையாகும். இருந்தாலும் அவை அனைத்தும் இதற்கு முதல் வெளியிடப்பட்ட 04 மலர்களில் விரிவாக தரப்பட்டுள்ளன. அவ்வகையில் மிகச் சுருக்கமாக சிலவற்றை தொட்டுச் சென்று இறுதி 05 வருடத்தில் நடந்தவற்றை விபரிப்பது பொருத்தமெனக் கருதுகின்றோம். 1990-1992 களில் நடைபெற்ற துர்ப்பாக்கியமானதும் காட்டுமிராண்டித் தனம் குடிகொண்டதுமான காலத்தில் அநாதைகளைக் காப்பாற்ற அக்கரைப்பற்று – 07 இந்து இளைஞர் மன்றத்தினால் இவ் ஆச்சிரமம் தோற்றுவிக்கப்பட்டது. இதனை ஸ்தாபித்த திகதி 1992.01.19ம் திகதி ஆகும். தலைவராக அப்போதைய இந்து இளைஞர் மன்றத் தலைவரான இறைபணிச் செம்மல் திரு.த.கயிலாயபிள்ளை அவர்களே நியமிக்கப்பட்டார். 05 மாணவர்களுடன் கிராம முன்னேற்ற சங்கக் கட்டிடத்தில் ஊர்ப்பெரியார்களின் ஒத்துழைப்புடன் ஆரம்பமானது. இராம கிருஸ்ணமிஷன், மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம் மற்றும் விஷேட அதிரடிப்படையினரும் ஒத்துழைப்பு வழங்கி ஆரம்பத்தில் உதவி நின்றனர். இராணுவத்தின் பாதுகாப்பு இல்லத்திற்கு இருந்ததால் நூற்றுக்கனக்கான அநாதை சிறுவர்கள் இலங்கை பூராகவும் இருந்து வந்து சேர்ந்தனர்.

இட நெருக்கடி கருதி அக்கரைப்பற்று ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம் காணிதர பாராளுமன்ற உறுப்பினர் திரு.J. திவ்வியநாதன் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் மர்க்கும் ஜனாப்.M.H.M.அஸ்ரப், DR.M.தேவராஜன், Dr.P.அருணகுலசிங்கம், கொழும்பு திரு.S.செல்வரூபன், அவுஸ்ரேலியா தூதுவராலயம், சைவப் புலவர்.சே.சாமித்தம்பி ஐயா, சர்வோதயம், ஸ்ரீ இராமகிருஸ்ணமிஷன் போன்றன கட்டிடங்களையும், கிணறுகளையும் தந்து மகிழ்ந்தனர். ஆலையடிவேம்பு பிரதேச செயலகம் மலகூடத்தையும், ப.நோ.கூ.சங்கம் மின் இணைப்பையும் தர ஊர்ப்போடிமார்கள் கட்டிட வளாகத்தை மண்போட்டு நிரப்பி உதவி நின்றனர். இந்து இளைஞர் மன்றம் மற்றும் சிறுவர் நன்னடத்தை திணைக்களம் சுற்றுமதில்கள் அமைத்து பாதுகாப்பளித்ததுடன் ஏனைய தேவைகளையும் சளைக்காது உதவி நின்றனர்.

இலண்டன் பட்ஸ், ஸ்கொட் நிறுவனம், சிவானந்தா வித்தியலாய பழைய மாணவர் சங்கம், ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம், தமிழ் ஓபன் றஸ்ட், MIOT, பிரித்தானியா அறங்காவல் குழு மற்றும் சிறுவர் நன்னடத்தைத் திணைக்களம், றோயல் நெதர்லாந்து தூதுவராலயம், இலண்டன் ரூறிஸ் றஸ்ற், திருமதி.சுமதி சுரேஸ்சண் , திரு.S.செல்வரூபன் , திரு.மு.நிதி, விபுலன் தியாகராஜா , திரு.R.ருத்ரா, ரொம் ஜெயந்திரன் போன்றன கைகொடுத்து அடிக்கடி பசிப்பிணி தீர்த்து பராமரிப்பு நிர்வாக செலவுகளுக்கு உதவி நின்றன. அத்துடன் தனிப்பட்ட ரீதியில் இலண்டனை சேர்ந்த நிர்மலா விஜயகுமார், கோபாலகிருஸ்ணன்(அகிலன் பவுண்டேஷன்), சுவாமி நித்தியானந்தாஜீ மகராஜ், அமெரிக்க துறவி தொண்டுநாத சுவாமிகள், சுவாமி தந்திரதேவா, சுவாமி சர்வமங்களானந்த ஜீ ஹிமாலயம், வண.இரெத்தினபாலதேரர், விமல்ராஜ் குழுவினர் சுவிஸ் போன்றோரின் நன்கொடைகளும் அவர்களோடு பொதுமக்களும் அடிக்கடி உதவி நின்றனர்.

அட்வறோ, ஒப்டிமா பவுண்டேஷன், உதவும் கரங்கள், பட்ஸ், ஸ்கொட், திருமதி.சுமதி அசோக்குமார், திருமதி.பார்வதி சங்கரப்பிள்ளை போன்றோரால், காணிகளும், உழவு இயந்திரமும், பண்ணைக் காணிகளும் மாடுகளும் கிடைத்தன. சிறுவர் நன்னடத்தை திணைக்களம், இந்து கலாசார திணைக்களம் ஆகியவற்றின் உதவிகள் கிடைக்க பிரதேச செயலகமும் முன்நின்று உழைத்ததுடன் தேவைகளை நிறைவேற்ற அதிகார பூர்வமான சமுர்த்தி நிவாரணம் போன்ற உதவிகளையும் வழங்கி நின்றன. பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு பாலர் பாடசாலை கட்டிடத்திற்கான உதவி வழங்கியும் பல்வேறு வகைகளில் முன்நின்று உழைத்தனர்.

கண்டி றொட்றிக் கிளப், கொழும்பு லைன்ஸ் கிளப், இலண்டன் ரூபன் முருகானந்தம், திருமதி.நிர்மலா விஜயகுமார் ஆகியோர் உபகரண உதவி வழங்கி நின்றனர். இலண்டன் ஸ்கைரோஸ் சில வருடங்கள் கல்வி அபிவிருத்திக்கு உதவி நின்றது. அம்பாரை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம், டயகோனியா நிறுவனம், யுனிசெப், SLCDF நிறுவனம் ஆகியன துவிச்சக்கர வண்டிகளையும் கல்வி உபகரணங்களையும் சுனாமி வேளையில் தந்துதவின. இங்கிலண்ட் றுவறிஸ்ட் கிளப் சமையல் உபகரணங்களையும் மாதாந்த உதவிகளையும் தந்து நின்றனர்.

இத்தனை உதவிகளோடு உணவு உதவிகளாக வெளிநாட்டு அன்பர்களுடன் ஊர்மக்களும் உதவியதன் பலாபலன்களே இத்தனை கட்டிடங்களுக்கும் காணிகளும் வாகனங்களும் உபகரணங்களும் 20 வருட கோடிக்கணக்கான செலவீனங்களும், சமூகப் பணிகளும், விழாக்களும் சமயப் பணிகளும், என்றால் மிகையில்லை.

இந்த 20 வருட காலத்தில் டாக்டர் ஒருவர் உட்பட பல பொறியியிலாளர்கள், விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் என பல்வேறு உத்தியோகத்தர்களாக 50 இற்கும் மேற்பட்டவர்கள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சீராளர்களாக வாழ்ந்து வருகின்றனர். மீதமாகவுள்ள 300 பேர் வரை சமுகத்தில் இணைந்து சீராக வாழ்கின்றனர் என்பதனை சுருங்கக் கூறும் இவ்வேளையில் இற்றைக்கு 05 வருடங்களுக்கு முன் நடந்தவற்றை சற்று விபரமாகக் கூறுவது பொருத்தமெனக் கருதுகின்றேன்.

## 2013-2017 வரையிலான காலப்பகுதியில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள்

2013ல் திருவள்ளுவர் பாடசாலைக்கு பாடசாலை உருவாக்கத்திற்கு காணி இல்லை என்ற தேடல் ஊர்மக்களால் முன்னெடுக்கப்பட்ட வேளையில் பொருத்தமான இடம் இல்லத்தோடு இணைந்த காணியே என உணர்ந்து மக்கள் கோரிக்கை கொடுத்தற்கமைய 2 வளவுகள் கட்டிடம் மற்றும் குளியலறை, மலகூடத் தொகுதிகள், சுற்றுமதில் அடங்கலாக நன்கொடையாக வழங்கப்பட்டன.

2013ல் புதிய மலகூடத்தேவை மற்றும் குளியலறைத் தேவைகளுக்காக 10இலட்ஷம் ரூபாவினை மாகாண சுகாதார அமைச்சு வழங்க அத்தேவை பூர்த்தி செய்யப்பட்டது.

2013ல் விவேகானந்தரின் 150ஆவது ஆண்டுவிழா மிகக்கோலாகலமாக நடாத்தியதோடு அவரின் 03 சிலைகள் 03 முக்கிய இடங்களில் நிறுவப்பட்டும் ஆண்டு தோறும் கொண்டாடப்பட்டும் வருகிறது.

2014ல் மாகாணசபை உறுப்பினர் திருவாளர்.T.கலையரசன் உதவியோடு சிறுவர் பூங்கா ஒன்றும் ரூபா 75000/- செலவில் அமைக்கப்பட்டது.

2013ல் இருபோக பயிர்ச்செய்கைக்காக மாகாணசபை உறுப்பினர் M.S.உதுமாலெப்பை அவர்களின் தனித்துவமான உதவி மூலம் பாதைகள் அமைத்து சாகாம காணியை வளங்கொழிக்கச் செய்ததோடு 03 போக குத்தகை நிதியைப் பயன்படுத்தி காணி முற்றாக திருத்தி அமைக்கப்பட்டது.

2015ல் அவரின் பங்களிப்போடு 50 வாடகைக் கதிரைகளும் அன்பளிப்புச் செய்தமையும் நிலையான வளர்ச்சிக்கு கிடைத்தன.

2014 - 2015ல் அனர்த்தங்கள் வந்தபோது இராமகிருஸ்ண மிஷன் உதவியோடு வெள்ள நிவாரணங்களை திருக்கோவில் வலய பாடசாலைகளுக்கு வழங்கியமை.

2013-2017ல் அகில இலங்கை இந்துமா மன்றம் மற்றும் பண்பாட்டலுவல்கள் அமைச்சும் 03 கணனிகளை ஈர்ந்து உதவின.

2017ல் திருவாளர்.R.நடராஜா இயக்குனர் அவர்கள் விபுலானந்தர் சிலை ஒன்றினை அமைத்து பண்பாடு உயர உதவி நின்றார்.

2013 – 2016ல் கொழும்பு இணைப்பாளர் திருவாளர்.S.செல்வரூபன் மற்றும் அம்பாரை மாவட்ட நிறுவனங்களின் ஒன்றியம் நிறுவன வளர்ச்சிக்காக வாடகை கூடாரம் 09ஐ வழங்கி உதவி நின்றன.

2016 – 2017ல் திரு.M.நிதி எனும் கோளாவிலைச் சேர்ந்த இனிய அன்பர் போட்டோ பிரதி இயந்திரம் மற்றும் பிள்ளைகளுக்கான உபகரணங்கள், உணவு அன்பளிப்புக்களையும் அன்போடு உதவினார்.

2016-2017ல் ஆலையடிவேம்பு இந்துமாமன்றம், ஞானம் பவுண்டேஷன், ஸ்ரீ இராமகிருஸ்ண மிஷன், அன்பே சிவம் - சுவிஸ், அக்கரைப்பற்று முஸ்லீம் இளைஞர்களின் றோயல் கழகம் என்பன பாடசாலை உபகரணங்களை வழங்கி உதவின.

2013-2017ல் பிரதேச செயலகம், சிறுவர் நன்னடத்தை திணைக்களம் என்பன ஆதார உதவிகளையும், இந்து கலாசார திணைக்களம் கல்வி கலாசார மற்றும் சுற்றுலா உதவிகளையும் வருடாந்தம் வழங்கி நின்றன.

2013-2017 மட்டக்களப்பு YMCA வருடாந்த நத்தார்பரிசுகளை வழங்கி சிறுவர்களை உற்சாகப்படுத்தி வருகின்றன.

2013-2017 அக்கரைப்பற்று கிறேற் கல்லூரி (பிரத்தியேக கல்வி நிறுவனம்) மாணவர்களுக்கான பிரத்தியேக கல்வியினை இலவசமாக வழங்கிக் கொண்டிருக்கிறது.

2017 இலண்டன் Scot மற்றும் நோர்வே திருமதி.சுமதி அசோகுமார் ஆகியோர் சாகாம காணியில் பெறப்படாத 05 ஏக்கரை பெற்றுத் தந்து இல்லத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டனர்.

2014 பட்ஸ், உதவுங்கரங்கள், திருமதி.நிர்மலா விஜயகுமார் ஆகியோர் பண்ணை அபிவிருத்திக்கு உதவி நின்றனர்.

2013-2017 வெளிநாட்டு, உள்ளூர் அன்பர்களால் நாளாந்த உணவுக்கான உதவிகள் கிடைக்கின்றன.

மேலும் இவ் ஆண்டு விழாவையும் மற்றும் நிகழ்வுகளையும் நடாத்த ஊர்பிரமுகர்களும், பெரியார்களும், முஸ்லீம் வாடிக்கை வர்த்தகர்களும் சிறுவர் நன்னடத்தை திணைக்களமும் மற்றும் தோள்கொடுத்து உதவும் நிறுவனங்களும் சமூக புத்தி ஜீவிகளும் உதவியுள்ளனர்.

இத்தனை உதவிகளும் கிடைத்திருக்கிறதே இவை எவ்வாறு செலவு செய்யப்பட்டன. என்பனவாறான பல கேள்விகள் சிலருக்கு ஏற்படலாம். கல்வி, பராமரிப்பு, நிர்வாகத்திற்கான ஒரு மாத செலவு 03 இலட்சங்களாகும். 05 வருடங்களுக்கும் எவ்வளவு செலவாகி இருக்கும் என சொல்லத் தேவையில்லை. இத்தனையும் கடந்துதான் மேலே கூறப்பட்ட காணிகளும் அபிவிருத்தி பணிகளும் முக்கிய தேவைகளும் விழாக்களும், புனர்வாழ்வுப் பணிகளும், நன்கொடைகளும் செலவுசெய்யப்படுகின்றன.

2013ல் 25 மாணவர்கள் பராமரிக்கப்பட்டனர். இதில் O/L சித்தி பெற்று விலகியவர்கள் 05 மாணவர்கள். 2014ல் 26 மாணவர்கள் பராமரிக்கப்பட்டனர். இதில் O/L சித்தி பெற்று விலகியவர்கள் 06 மாணவர்கள். 2015ல் 27 மாணவர்கள் பராமரிக்கப்பட்டனர். இதில் O/L சித்தி பெற்று விலகியவர்கள் 03 மாணவர்கள். 2016ல் 27 மாணவர்கள் பராமரிக்கப்பட்டனர். இதில் O/L சித்தி பெற்று விலகியவர்கள் 02 மாணவர்கள். தற்போது இல்லத்தில் பராமரிக்கப்படுபவர்களில் 03 மாணவர்கள் A/L வகுப்பிலும், 02 மாணவர்கள் O/L வகுப்பிலும் கற்கின்றனர்.

இவ் ஆச்சரியம் தரவல்ல புனிதப்பணி சிறக்கவும் எம்மை திறம்பட இயக்கவும் இத்திருநெறிகளுக்கு ஆதார சுருதியாக முன்வந்தோரை மகிழ்ச்சியுடன் இணைக்கவும் ஆதார சுருதியாக அமைந்த பேராற்றல் மிக்க பேரருளுக்கும் சிரந்தாழ்த்தி வணங்கி நன்றி கூர்ந்து எல்லோருக்கும் இத்திருவருள் நின்றிலங்கவும் சகலரும் சாந்தியும் சந்தோஷமும் பெற்று வாழவும் பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம்.

நன்றி

இந்து இளைஞர் மன்றம்
அக்கரைப்பற்று



# விபுலானந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் கலாசார பண்பாட்டு விழுமியங்கள்

சிறுவர் அபிவிருத்தி நிலையம் என்பது பொதுவாக அது அமைந்துள்ள பிரதேசத்தின் கலாசார பண்பாட்டு விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டே வளர்ச்சி அடைகின்றது. இவ்விடங்கள் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் கல்வி வளர்ச்சிக்கும் அதன் நோக்கங்களுக்கும் இணைந்து செயற்படுகிறது. இருந்த போதிலும் இங்கு சேர்க்கப்படும் மாணவர்கள் பெரும்பாலும் மக்களின் இயல்பான கலாசார பண்பாடு விழுமியங்களுக்கு சற்றுப் புறநடையான பிரதேசங்களில் இருந்து ஓரங்கட்டப்பட்டவர்களென சிறுவர் நன்னடத்தை பிரிவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு சேர்க்கப்பட்டவர்களே.

இவர்களிடையேயும் வயதுக்கேற்ற நிறையோ அறிவு, ஆற்றல், முதிர்ச்சியையோ சிறிதளவேனும் காணமுடியாது. மாறாக நல்ல விசயங்களை ஏற்றுக்கொள்ளாத புறங்கிருத்தியங்களும் சுத்தமின்மையும் கற்பிக்கும் போதும் புத்தி புகட்டும் போதும் நித்திரைகொள்வதும், விரும்பிய விரும்பியவாறு தீர்மானங்களை எடுத்தலும், நிறைவேற்றலும், புறம் பேசுதலும், தவிர்க்கப்பட்ட சொற்பிரயோகங்களும், விதண்டாவாதங்களும், அதிகமாகக் காணப்படுவர்களே இனங்காணப்பட்டு சேர்க்கப்படுகின்றனர். இவர்களை ஒழுக்க விழுமியங்களை கடைப்பிடிக்கக் கூடியவர்களாகவும், சீரான கல்வியைப் பெற ஆர்வமுடையவர் களாகவும், இயல்பான கலாசாரத்தைப் பின்பற்றி எதிர்காலத்தில் மக்களோடு மக்களாக சந்தோஷத்துடன் இணையக் கூடியவர்களாகவும், கீழ்ப்படிந்து நடக்கக் கூடியவர்களாகவும், விவேகம் உள்ளவர்களாகவும் திறன்கள் மிக்கவர்களாகவும் மாற்றுவதே இச் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் தலையாய கொள்கையாகும்.

இச் செயற்பாட்டில் 25 வருட சேவையைப் புரிந்து தலைநிமிர்ந்து நிற்கும் நிலையத்தின் கலாசார பண்பாட்டு விழுமியங்களையும் இதன் சாதனைகளையும் சற்றுப்பின் நோக்கிப் பார்ப்போமானால் 98% ஆனவர்கள் தனித் தமிழ் பேசுபவர்களாகவும் இந்து சமய பண்பாட்டு விழுமியங்களை முற்றுமுழுதாகக் கடைப்பிடிப்பவர்களாகவும் கற்றல் செயற்பாட்டில் 60% ஆன மாணவர்கள் க.பொ.த.சாதாரணதரம் முதல் பல்கலைக்கழகம் வரைத் தேர்ச்சி பெற்றவர்களாகவும் 30% ஆன மாணவர்கள் இடைவிலகி பராமரிப்பாளர்களோடு இணைந்தவர்களாகவும் 10% ஆன மாணவர்கள் தொழிற்கல்வி பயின்று சிறப்பானவர்களாக சமூகத்தில் இணைந்தவர்களாகவும் இருக்கின்றனர். தற்போது கிருஸ்தவ சிறார்களும் இங்கு கற்க விருப்பங்கொண்டு சேர்க்கப்படுகின்றனர். இதற்காக அவர்களுக்கும் அவர்கள் மத அனுஸ்டானங்களைச் செய்யும் சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. எது எப்படியாயினும் இந்து சமய கலாசாரமே இங்கு நிறைவாகப் பேணப்படுகிறது.

நாயன்மார்களின் குருபூசை, சமூகப் பெரியார்களின் நினைவு தினங்கள், சரஸ்வதிப்பூஜை, திருவெம்பாவை பூசைகள், சிவராத்திரி விரதம் மற்றும் சிறுவர்கள் விருப்பத்திற்குரிய விரதங்கள், தைப்பொங்கல், சித்திரை, தீபாவளி புத்தாண்டு நிகழ்வு மற்றும் ஆலயத்திருவிழாக்களில் கலந்துகொள்ளல் என்பன கிரமமாக நடைபெறுகின்றன.

அத்தோடு மாதாந்த பூரணைகள் தோறும் அந்தர்யோகமும் அதனூடாக மந்திரஜெபம், நாம கீர்த்தனம், பஜனை, தியானம், இஸ்டமந்திரம் ஓதுதல், புராண இதிகாச விளக்கங்கள், நற்சிந்தனைகள் என்பன கிரமமாக நடைபெறுகின்றன. இருந்த போதிலும் நத்தார், வெசாக், பண்டிகையும் முகமது நபிகள் பிறந்த தினங்களும் இல்லத்தில் சேரும் ஏனைய சிறுவர்களுக்காக கொண்டாடும் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன.

அடுத்து இங்கு நடைபெறும் விழாக்களை நோக்குவோமானால் 02 தவணை விடுமுறைக்கு முன்பதான நாளில் சிறுவர்களின் திறனை இனங்காணும் முகமாக திறன் செயற்பாட்டு நிகழ்வுகளும், 03ம் தவணைவிடுமுறையில் ஆற்றல் களமும் ஆண்டு நிறைவு விழாவும் வருட இறுதியில் பெற்றோர் சிறுவர் நிர்வாக ஒன்றுகூடலும் நிகழ்ச்சிகளும் சரஸ்வதிப் பூஜை, சிவராத்திரி காலங்களில் போட்டி நிகழ்ச்சிகளும் மற்றும் சமய குரவர்களின் நினைவு தினங்களில் கவிதைப் பேச்சுப் போட்டிகளும் சமயப் பெரியார்களின் நினைவுதினங்களான சுவாமி விவேகானந்தர், ஸ்ரீ இராமகிருஷ்ணர், அன்னை சாரதா தேவி , விபுலானந்தர், நாவலர் போன்றோர் நினைவு தினங்களில் அவரகள் பற்றிய பல்வேறு கோணப் பேச்சுப் போட்டிகளும்

தவறாது நடைபெறுவதோடு சமூக பண்பாட்டு ஒழுக்க விழுமியங்களும் மாணவர்களிடையே இயல்பான முறையில் பரிணமிக்க வழி செய்யப்படுகின்றது.

அத்தோடு இந்துமதம் சார்ந்த சுவாமிமார்கள் அடிக்கடி வருகை தரும் போதெல்லாம் விஷேட சமய பேருரைகள் இல்லத்தின் ஆண்டு விழாக்களின் போதும் சுவாமிமார்களதும் அதிகாரிகளதும் சமயப் பெரியார்களதும் அறிவு வழிகாட்டல்களும் நடைபெற்ற வண்ணம் இருக்கின்றன.

அத்தோடு சிறுவர்களுக்குள்ளேயே விளையாட்டுக்கழகம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு அடிக்கடி வெளிச் சிறார்கள் கழகங்களோடு போட்டியிடத் தூண்டி வெற்றி தோல்விகளை ஜீரணித்து சமுதாயத்தில் முன்னேறும் உளப்பாங்கும் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகிறது.

கல்வி அபிவிருத்தியை நோக்குமிடத்தில் இங்கு சேரும் மாணவர்கள் பெரும்பாலும் தரம் 08 வரையிலானவர்கள் எழுத்தறிவு அற்றவர்களாகவே உள்ளனர். இதனால் வாசிக்கும் திறன் அற்றவர்களாகவும் ஆசிரியர் கற்பிப்பதை புரியாதவர்களாகவும் கீழ்ப்படிவு, ஒழுக்கம் அற்றவர்களாகவும், விறைப்பான போக்கு உடையவார்களாகவும் காணப்படுகின்றனர். பாடசாலை வகுப்பறைகளில் குழப்படி மிக்கவர்களாக அவர்கள் பற்றி அனேகமான முறைப்பாடுகளைக் கூறும் விதத்தில் நடந்துகொள்பவர்களாகவே சேர்க்கப்படுகின்றனர்.

இதற்காக இவர்களது குழப்பங்களை சகித்து இவர்கள் வழிச்சென்று எழுத்தறிவை ஊட்டவல்ல ஆசிரியைகள் நியமிக்கப்படுவதோடு பிரத்தியேகக் கல்வியும் வழங்கப்படுவதுடன் ஒவ்வொருவரையும் கவனிப்பதற்கான மேல் வகுப்பு மாணவர்களும் நியமிக்கப்பட்டு பிழைகள் திருத்தப்பட்டு சரியானவற்றைப் புரிந்து நடக்க வழிசெய்யப்பட்டுள்ளன. இத்தனைக்கும் மேலாக மேற்றன் மேற்பார்வையும் இரு காவலர்களின் கண்காணிப்பும் சிரேஸ்ர மாணவர்களின் பரிந்துரைகளும் மாணவர்களின் சீர்மைக்கு வழிகோருகின்றன.

நேர ஒழுங்கினைப் பொறுத்த வரையில் கடமை மாற்றங்களுக்கு மணி அடிக்கும் செயற்பாடு இங்கு இல்லை. காரணம் இவர்கள் எதிர்காலம் இயல்பாக செயற்படும் திறனை இழந்துவிடக் கூடிய நிலையை ஏற்படுத்தி விடும் என்பதனால் வீட்டில் வாழும் சிறுவர்களைப் போல் இயல்பாக நேரத்தை உணர்ந்து கடமைகளை கண்ணியத்தோடு செய்யும் பாங்கு ஊட்டப்படுகிறது. அதேபோல் இல்லச் சிறார்கள் என்ற பரிதாபமான பார்வையும் இவர்களில் விழாமல் இருக்கும் பொருட்டு

முக்கியமான நிகழ்வு நேரங்களைத் தவிர ஏனைய நேரங்களில் சமூகம் கடைப்பிடிக்கும் சாதாரண ஆடைகளை, அலங்காரங்களை கடைப்பிடிக்க வகைசெய்யப்பட்டுள்ளது.

ஆண்டு தோறும் சுற்றுலாக்கள் மாவட்ட, மாகாண, அகில இலங்கை ரீதியாகவும் ஓரிரு தடவைகள் மேற்கொள்ளப்படுவதோடு இடைஇடையே கடற்கரை, இயற்கைக் காட்சிகள் நிறைந்த இடங்களுக்கும் விஷேடமான அறிவுசார் நிகழ்ச்சிகளுக்கும் பிள்ளைகள் அழைத்துச் செல்லப் படுகின்றனர்.

இத்தனைக்கும் மேலாக பிள்ளைகளின் பிறந்த நாள் விழாக்கள் மற்றும் தன்னம்பிக்கை ஊடான கலைசார்ந்த தமிழ் சார்ந்த உடல் உழைப்பு சார்ந்த சட்ட வரையறைக்குட்பட்ட போட்டிகளில் சான்றிதழ் பெற்றவர்களுக்கு விழாக்கள் தோறும் விருதுகள் வழங்கி கௌரவிப்புக்களும் நடைபெறுகின்றன.

அறிவு வளர்ச்சி ஏற்படுத்தும் வகையில் ஆங்கிலக் கல்வி, கணணிக்கல்வி என்பன இங்கு சில காலங்களில் ஏற்படுத்தப்பட்டாலும் அவற்றை மேலும் வளர்த்தெடுக்க வசதி வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை. இருந்தாலும் அவற்றினைப் பெறும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

நூலகவசதி, பத்திரிகை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளன. சிறுவர் தினம், முதியோர் தினம், சுகாதாரவாரம் என்பன இங்கு கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

விஞ்ஞான, கணித, ஆங்கில மற்றும் ஏனைய பாடங்களை கற்பதற்கு பிரத்தியேக வகுப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வேறுபட்ட சில விஷேட பழக்கவழக்கங்கள் கூட்டுச் சேரும் வாய்ப்புள்ளதால் அவைகள் மெருகூட்டப்பட்டு ஒரே பண்பாட்டின் கீழ் கொண்டுவரப்படுகின்றன.

வேலைப்பங்கீடுகள் அளிக்கப்பட்டு அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுவதுடன் சிறார்களிடையே அமைதியின்மை, மனக்குழப்பம், விரக்தி, ஆக்கிரமிப்பு உணர்ச்சி போன்றன தவிர்க்கப்படுகின்றன. மாணவர் மன்றம் அமைக்கப்பட்டுள்ளதால் தலைமைத்துவப் பண்பு, பொறுப்புக்களை ஏற்று நடத்தும் பண்பு தன்னடக்கம் பெறும் பண்பு இயல்பாக ஏற்படுத்தப்படுகின்றன.

நாள்தோறும் பெரியார்களைப் பற்றிச் சிந்திக்கவும் படிக்கவும் வாய்ப்பு ஏற்படுத்தப்படுவதுடன் இல்லக் கீதமும் இசைக்கப்பட்டு ஆரோக்கியமான சிந்தனை

நாட்டுப்பற்று, ஒருமைப்பாடு பணிவு, மதிக்கும் பண்பு போன்ற உயர்ந்த விழுமியங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. விழாக்களில் விருந்தினரைக் கௌரவித்தல், ஆசிரியர் தினத்தில் ஆசிரியர்களைக் கௌரவித்தல், அத்தோடு இல்லத்தில் கடமைபுரியும் உத்தியோகத்தர்களின் விசேடமாக தலைவர் போன்றோரின் பிறந்தநாள் விழாவைக் கொண்டாடுவதோடு இல்லத்தோடு கலந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டன. இதனால் பெரியோரை மதித்தல், கீழ்ப்படிவு, சமுதாயத்தின் சமநோக்கு, பிறருக்கு உதவுதல் போன்ற விழுமியங்கள் வளர்க்கப்படுகின்றன.

ஒருவருக்கொருவர் கருத்துப் பரிமாற்றங்களைக் கொண்டிருப்பதால் விரோதங்கள் ஏற்படாத வகையில் ஒவ்வொருவரிடமும் மற்றவர்களின் சேமநலனையும் ஈடுபாட்டினையும்கொள்ளும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்ட சட்டதிட்டங்களை யாப்பு ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் கலாசாரப் பண்பாட்டு விழுமியங்களும் வளர்ச்சியடைந்து 25 ஆண்டுகளைப் பூர்த்தி செய்த இவ்வில்லப் பயணத்தில் பங்குதாரர்களாக இருந்து செயற்பட்ட தலைவர் உட்பட இயக்குனர்கள், இந்து இளைஞர் மன்றத்தினர், உத்தியோகத்தர்கள், சேவையாளர்கள் போன்றோரின் காத்திரமான சேவையினாலும் பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள், பிரத்தியேக கல்வி நிலையங்கள், சுகாதார திணைக்களம், பிரதேச செயலகம் மற்றும் சிறுவர் நன்னடத்தைத் திணைக்களம், இந்து கலாசார திணைக்களம் போன்றோரின் சேவையினாலும் எல்லாவற்றுக்கும் மேலாக உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்டோர் உதவிகளினாலும் டாக்டர்களையும், பொறியியலாளர்களையும், விரிவுரையாளர்களையும், ஆசிரியர்களையும் மற்றும் இதர உத்தியோகத்தர்களையும் சமூகத்தில் பெயர் சொல்லி அழைக்கக் கூடிய தலைவர்களையும் தொழிலாளிகளையும் உருவாக்கியுள்ளதே இவ்வில்லத்தின் 25 வருட பேறாகும்.

இல்லத்தின் பழைய மாணவர்கள் அடிக்கடி வந்து சிறந்த மாணவர்கள் என இனங்காணப்பட்டவர்களுக்கு உதவுகின்ற சிறந்த பண்பும், அதேபோல் தன்னை வளர்த்த இல்லத்தை நேசிக்கின்ற பண்பும் தொடர்ச்சியாக நடைபெறுகின்றது. இதனால் நாமும் இவர்களைப்போல் வரவேண்டும் என்ற தனியாத தாகம் பிள்ளைகளுக்கு ஏற்படுவதை உணரமுடிகின்றது.

உணவைப் பொறுத்தவரையில் சுயமாக விளைவித்த நெல்லைக் குற்றிய அரிசையே உணவுக்காகப் பாவிக்கப்படுகிறது. அதுபோல் பால், தயிர், தேங்காய், மரக்கறி, பழம் வாங்கப்படுகின்றன. இடையிடையே அரச சட்ட விதிகளை மீறாத வகையில் மச்சமும் வேறாக கொடுக்கப்படுகின்றன.

பிள்ளைகளுக்கு காலை மாலை வேறு உணவுகளும் குறைவினை நிறைவாக்கும் சத்துணவுகளும் வழங்கப்படுகின்றன. இதனால் ஆரோக்கியம் நிறைந்தவர்களுக் காகவும் சுறுசுறுப்பு மிக்கவர்களுக்காகவும் முடியாது என்ற கல்வியை தொடரக் கூடியவர்களுக்காகவும் மாற்றம் பெறுகின்றனர்.

இப்பாரம்பரியத்தைக் கட்டிக் காத்த இவ்வில்லம் வெள்ளிவிழாவை கொண்டாடி இவ்வூருக்கு அணி சேர்க்கிறது. இவ்வில்லத்தால் இவ்வூர் மக்கள் புளகாங்கிதம் அடைகின்றனர். அவ்வகையில

இதற்கு முன்னின்று உழைத்த அனைவருக்கும் இறைவன் சாந்தியும் சந்தோஷமும் கீர்த்தியும் அளித்து அருள் பாலிப்பானாகுக.

திரு. க. செல்வானந்தம் D.O
கௌரவ செயலாளர்
சுவாமி விபுலானந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையம்
அக்கரைப்பற்று.

.

*இரக்கம் உள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்தமூளை வேலை செய்யக் கூடிய கைகள் ஆகிய இந்த மூன்றும் நமக்குத் தேவை.*

**- சுவாமி. விவேகானந்தர்**

*வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ வள்ளலடி யிணைக்கு வாய்த்த மலரெதுவொ? வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல உள்ளக் கமலமடி உத்தமனர் வேண்டுவது*

- ***சுவாமி. விபுலானந்தா***

*தேச முன்னேற்றம் என்னும் தேர்ச்சக்கரத்தைக் கிளப்புவதற்கு உங்கள் தோள்களைக் கொடுங்கள்*

- ***சுவாமி. விவேகானந்தர்***

## சுவாமி விபுலாநந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் கடந்த 5 வருடங்களில் உணவளித்த அன்புள்ளங்களின் பட்டியல்

### தை மாதம்

| | |
|---|---|
| 01. திரு.எஸ்.மணிவண்ணன் | ஊர்ப்போடியார் வீதி, அக்கரைப்பற்று - 07. |
| 02. திருமதி.எஸ்.சத்தியவாணி | தபாற்கந்தோர் வீதி, அக்கரைப்பற்று - 08. |
| 03. திருமதி.ஈ.புவனேஸ்வரி | கோயில் வீதி,கோளாவில் -01, அ.பற்று. |
| 04. திரு.திருமதி.உமாசுதன் சங்கீதா | இலண்டன் |
| 05. திருமதி.வேலாயுதன் நல்லம்மா | இல.50,சாகாமவீதி, கோளாவில், அ.பற்று |
| 06. திருமதி.வடிவேல் சுட்டி | தபாற்கந்தோர் வீதி, கோளாவில், அ.பற்று. |
| 07. திரு.பீ.மயூரன் | வீரம்மா காளிகோயில் வீதி, அக்கரைப்பற்று -7/4 |
| 08. திருமதி.அழகம்மா இளையதம்பி | சாகாம வீதி, பனங்காடு, அ.பற்று. |
| 09. திரு.ஆர்.இரத்தினராசா | முதலியார் வீதி, மட்டக்களப்பு. |
| 10. திரு.ஆர்.ஜெகதீஸ்வரன் | ப.நோ.கூ.ச.கடை வீதி, ஆலையடிவேம்பு,அ.பற்று. |
| 11. திருமதி.தனரஞ்சனி ஜெகதீஸ்வரன் | நாவலர் வீதி, அக்கரைப்பற்று – 7/4. |
| 12. திருஆர்.ருத்ரா | இலண்டன் |
| 13. திரு.கே.விமலகாசன் | விவேகானந்தா பாடசாலை வீதி, அ.பற்று - 08. |
| 14. திரு.ஈ.சிறிதரன் | ஆர்.கே.எம்.வீதி, அக்கரைப்பற்று. |
| 15. திரு.திருமதி.சிவராஜா மல்லிகா | மருத்துவர் வீதி, அக்கரைப்பற்று – 8/1. |
| 16. திருமதி.சி.விஜயரெத்தினம் | ஆர்.கே.எம்..பாடசாலை வீதி, கல்முனை – 02. |
| 17. சிவகணேஸ் ரெக்ஸ் | உரிமையாளர், 41,பெரியகடை, யாழ்ப்பாணம். |
| 18. செல்வன்.டாக்டர்.ஜீவரதன் | 1/1, பிரதான வீதி, துறைநீலாவணை. |
| 19. செல்வன்.கே.செல்வானந்தம் | 10, சிவன் கோயில் வீதி, பனங்காடு, அ.பற்று. |
| 20. திருமதி.ஞானகி காங்கேயன்பிள்ளை | சாகாம வீதி, கோளாவில், அக்கரைப்பற்று. |
| 21. செல்வி.எம்.பேரின்பநாயகி | விளையாட்டு மைதான வீதி, அக்கரைப்பற்று -09. |
| 22. திருமதி.கமலாதேவி செல்வநாயகம் | குருக்கள் வீதி, அக்கரைப்பற்று. |
| 23. திரு. கதிர்காமநாதன் | இலண்டன் |
| 24. திரு.எம்.உதயராஜ் | 123, சாகாம வீதி, அக்கரைப்பற்று - 08. |
| 25. திரு.ராஜரெட்ணம் ரமணி | விவேகானந்தா பாடசாலை வீதி, அக்கரைப்பற்று -08. |
| 26. திருமதி.சாந்தினி ரகுநாத் | மறுமலர்ச்சி வீதி, பனங்காடு, அக்கரைப்பற்று. |
| 27. திரு.ஐயம்பெருமாள் புண்ணியமூர்த்தி | பாலர் பாடசாலை வீதி, பெரிய பனங்காடு, அ.பற்று. |
| 28. திரு.நாராயணன் முரளி | கோயில் வீதி,கோளாவில், அ.பற்று. |
| 29. திரு.குணவர்த்தன மோகன் | முத்துலிங்கம் வீதி, கோளாவில், அ.பற்று. |
| 30. திரு.திருமதி.மகேந்திரராஜா வளர்மதி | அன்பே சிவம் (சுவிஸ்) |

**சுவாமி விபுலாநந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில்**
**கடந்த 5 வருடங்களில் உணவளித்த அன்புள்ளங்களின் பட்டியல்**

## மாசி மாதம்

| | |
|---|---|
| 01. திரு.எஸ்.ஜெயகாந்தன் | அவுஸ்திரேலியா |
| 02. திரு.எஸ்.செல்வரூபன் | போஸ்பெல் பிளேஸ் கொழும்பு |
| 03. திரு.கே.ரவீந்திரன் | அமெரிக்கா |
| 04. திரு.ரீ.அரசரெட்ணம் | அம்பாறை வீதி அக்கரைப்பற்ற |
| 05. திரு.பத்மநாதன் ஜனார்த்தனன் | மாயழகு வீதி அக்கரைப்பற்று |
| 06. திரு.ஜீ.எம்.குணரத்ன | அம்பாறை |
| 07. திரு.ஆர்.நவரெட்ணம் | APC வீதி, தம்பிலுவில் - 01 |
| 08. திரு.டாக்டர்.பீ.கே.ரவீந்திரன் | ச.சி.நி, ஆதார வைத்தியசாலை, அக்கரைப்பற்று |
| 09. திரு.சிவகுரு ஆசிரியர் | கல்லூரி வீதி, அக்கரைப்பற்று |
| 10. திருமதி.பீ.தணிகாசலம் | நாவலர் வீதி, அக்ரைப்பற்று |
| 11. திருமதி.ஏ.விஜிதா | அர்ச்சுணன் வீதி, நாவற்காடு, அக்கரைப்பற்று |
| 12. திரு.நவரெட்ணம் சுரேஸ் | மருத்துவர் வீதி, அக்கரைப்பற்று |
| 13. திரு.ஆர்.ருத்ரா | இலண்டன் |
| 14. திரு.எம்.கோபாலகிருஸ்ணன் | இலண்டன் |
| 15. திரு.எஸ்.செல்வரூபன் | போஸ்பெல் பிளேஸ், கொழும்பு |
| 16. திரு.கே.பாலதாஸ் | குருக்கள் வீதி, அக்கரைப்பற்று |
| 17. திருமதி.சத்தியதேவி சிவானந்தராஜா | இலண்டன் |
| 18. திருமதி.அமராவதி வடிவேல் | தபாற்கந்தோர் வீதி,பனங்காடு, அக்கரைப்பற்று |
| 19. திரு.திருமதி.தேவராஜா தேவிகா | இலண்டன் |
| 20. திரு.ரீ.புவிதர்சன் | 67, வன்னியனார் வீதி, அக்கரைப்பற்று |
| 21. திரு.கே.மாணிக்கம் | தீவுக்காலை, கோளாவில் - 01, அக்கரைப்பற்று |
| 22. திரு.கே.சுதர்சன் | ஊர்ப்போடியார் வீதி, அக்கரைப்பற்று |
| 23. திரு.சுப்ரமணியம் தில்லைநாயகம் | தபாற்கந்தோர் வீதி, பனங்காடு, அக்கரைப்பற்று |
| 24. திருமதி.இளையதம்பி அழகம்மா | சின்னப்பனங்காடு, அக்கரைப்பற்று |
| 25. திரு.குணரத்ன மோகன் | முத்துலிங்கம் வீதி கோளாவில் அக்கரைப்பற்று |
| 26. திரு.திருமதி.உமாசுதன் சங்கீதா | இலண்டன் |
| 27. திரு.ரீ.தினேஸ்குமார் | 7/8 பொதுவீதி அக்ரைப்பற்று |
| 28. திருமதி மகாலிங்கம் யசோதா | மாயழகு வீதி அக்கரைப்பற்று – 08 |
| 29. திரு.ரீ.ஜெ.அதிசயராஜ் | ஆலையடி வீதி தம்பிலுவில் - 02 |
| 30. அதிரடிப்படை முகாம் | அக்கரைப்பற்று |
| 31. சதாசிவம் தமிழ்செல்வி | நாவற்காடு, அக்கரைப்பற்று |
| 32. வைரமுத்து சதாசிவம் | 23 காட் வீதி அட்டப்பளம் நிந்தவூர் |
| 33. திரு.க.செல்வானந்தம் | இல.10 சிவன் கோயில் வீதி பனங்காடு, அ.பற்று |
| 34. திருமதி.மங்கயக்கரசி சோமசுந்தரம் | சாகாம வீதி கோளாவில் |
| 35. திருதிருமதி புவிதாசன் கௌசல்யா | பிரான்ஸ் |
| 36. திருமதி அமராவதி மயில்வாகனம் | குருக்கள் வீதி அக்கரைப்பற்று – 07 |
| 37. திரு.க.புவனேந்திரன் | ஆலையடிவேம்பு வீதி, நாவற்காடு, அக்கரைப்பற்று. |
| 38. திரு.வீ.சிவசம்பு | சாரதா வீதி, அக்கரைப்பற்று – 08. |

## சுவாமி விபுலாநந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் கடந்த 5 வருடங்களில் உணவளித்த அன்புள்ளங்களின் பட்டியல்

### பங்குனி மாதம்

| | | |
|---|---|---|
| 01. | திருமதி.புனிதவதி பாரதிதாசன் | பொற்கொல்லர் வீதி, அக்கரைப்பற்று |
| 02. | திரு.சி..கதிர்காமநாதன் | இலண்டன் |
| 03. | திருவீ.சிவசம்பு | சாரதா வீதி, அக்கரைப்பற்று – 08. |
| 04. | திரு.திருமதி.வினித்தா மயில்வாகனம் | ஊர்ப்போடியார் வீதி, அக்கரைப்பற்று. |
| 05. | திரு.எம்.விநாயகமூர்த்தி | மலேசியா |
| 06. | திருமதி.ரீ.பொற்செல்வி | ப.நோ.கூ.ச.வீதி, ஆலையடிவேம்பு, அ.பற்று |
| 07. | திருமதி.செல்லப்பா தங்கக்கிளி | கண்ணகி கிராமம் - 01, அக்கரைப்பற்று. |
| 08. | திரு.எம்.நிதி (திரு.எஸ்.முருகேசு) | கோளாவில், அக்கரைப்பற்று. |
| 09. | திரு.கே.லோகநாதன் ஆசிரியர் | சாகாம வீதி,பனங்காடு, அக்கரைப்பற்று. |
| 10. | திருமதி.பீ.தனலெட்சுமி இரத்தினசிங்கம் | பூசாரியார் வீதி, கோளாவில் - 03. |
| 11. | திரு.கே.பாலதாஸ் | குருக்கள் வீதி, அக்கரைப்பற்று. |
| 12. | திரு.ஆர்.ருத்ரா | இலண்டன் |
| 13. | திரு.சுப்பிரமணியம் தில்லைநாயகம் | தபாற்கந்தோர் வீதி, பனங்காடு, அ.பற்று |
| 14. | திரு.பீ.ரவீந்திரன் | 1ஆவது சொய்ஸ் உரிமையாளர், கொழும்பு. |
| 15. | திரு.கே.மயூரன் | கனடா |
| 16. | திரு.கே.பிரகலாதன் | பஸ்தியான் வீதி, அக்கரைப்பற்று- 08. |
| 17. | திரு.திருமதி.உமாசுதன் | பஸ்தியான் வீதி, அக்கரைப்பற்று- 08. |
| | திருமதி.சங்கீதா (திரு.ரீ.தினேஸ்) | அம்பாரை வீதி, அக்கரைப்பற்று. |
| 18. | திரு.வேதநாயகம் | சின்னப்பனங்காடு, அக்கரைப்பற்று. |
| 19. | திரு.அபயவர்த்தன சந்திரகுமார் | அம்பாரை வீதி, அக்கரைப்பற்று. |
| 20. | திரு.திருமதி.தினேஸ் பிரதிகா | நெக்கோட் பின் வீதி, அக்கரைப்பற்று. |
| 21. | திருமதி.க.சாந்தமலர் | ஆர்.கே.எம்.வீ வீதி அக்கரைப்பற்று |
| 22. | ஞானம் பவுண்டேசன் | கோயில் வீதி கோளாவில் அக்கரைப்பற்று |
| 23. | திரு.நாராயணன் முரளிதாசன் | இலண்டன் |
| 24. | திரு.சீ.கே.நாதன் | நெசவாலை வீதி அக்கரைப்பற்று |
| 25. | திருமதி.எஸ்.தெய்வநாயகம் | சின்னப்பனங்காடு அக்கரைப்பற்று |
| 26. | திருமதி.இ.அழகம்மா | பஸ்தியான் வீதி அக்கரைப்பற்று |
| 27. | திரு.எஸ்.குமார் | இலண்டன் |
| 28. | திரு.எஸ்.ஜெகநாதப்பிள்ளை | கிட்டங்கி வீதி சேனைக்குடியிருப்ப கல்முனை |
| | (திரு.கே.செல்வராசா) | போஸ் பெல் பிளேஸ் கொழும்பு |
| 29. | திரு.கே.குகேந்திரன் (திரு.எஸ்.செல்வரூபன்) | போஸ் பெல் பிளேஸ் கொழும்பு |
| 30. | திரு.சிவநேசன் (திரு.எஸ்.செல்வரூபன் ) | போஸ் பெல் பிளேஸ் கொழும்பு |

| | |
|---|---|
| 31. திரு.வாகீசன் (திரு.எஸ்.செல்வரூபன்) | போஸ் பெல் பிளேஸ் கொழும்பு |
| 32. திரு.சிவலிங்கதாசன்(திரு.எஸ்.செல்வரூபன்) | கிட்டங்கி வீதி சேனைக்குடியிருப்பு கல்முனை |
| 33. திரு.ரகு (திரு.கே.செல்வராசா) | ஜீ.எஸ் வீதி வாச்சிக்குடா அக்கரைப்பற்று |
| 34. திரு.கே.கிருஷாந்தன் | சாகாம வீதி கோளாவில் அக்கரைப்பற்று |
| 35. திருமதி.குமாரப்பெருமாள் பசுபதி | 271/1 கொத்தலாவெல அவனியு கொழும்பு |
| 36. திரு.எம்.சற்குணாநந்தன் | போஸ் பெல் பிளேஸ் கொழும்பு |
| 37. திரு.எஸ்செல்வரூபன் | 1ஆவது சொய்ஸ் கடை உரிமையாளர் |
| 38. திரு.ப.ீரவீந்திரன் | யாழ்ப்பாணம் |
| 39. திரு.சிவகுருநாதன் | ஆர்.கே.எம். வீதி அக்கரைப்பற்று |
| 40. அன்பே சிவம் - இணைப்பாளர் | கிட்டங்கி வீதி, சேனைக்குடியிருப்பு, கல்முனை |

தன் செற்படிக் கேட்கும் மகன்கள், செல்வம், தரக்கூடிய நற்கல்வி, ஆரோக்கியம், பெரியொர்களின் சகவாசம், அநுகூலமான மனைவி - இவை அனைத்தும் எந்த கிருஹஸ்தனுக்கு அமைகின்றனவோ, அவனுக்குத் துக்கமே உண்டாகாது

- **ஒரு. சமஸ்கிருத சுலோகம்**

பேசுவதைக்காட்டிலும் பேசமால் இருப்பதே நல்லது பேசித்தான் அக வேண்டுமென்றால் உண்மைபேசு

- ***மகாபாரதம்***

தங்கத்தை புடமிடுகிறது நெருப்பு மனிதனைப் புடமிடுகிறது துன்பம்

- ***டால்டன்***